செப்டம்பர் - அக்டோபர் 2023 தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# பிரசங்கியின் புத்தகம்

- பிரசங்கியின் வார்த்தைகள்
- அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை
- வாழ்க்கையைப் பற்றிய அவதானிப்புகள்
- பிரசங்கியின் பிரதிபலிப்புகள்
- ஞானமான ஆலோசனை
- ஞானத்தின் தேவை
- வாழ்க்கை, பின்னோக்கிப் பார்க்கையில்
- நிறையிரை

**பிரசங்கியின் புத்தகம்**

# ஆதியிலே



பிரசங்கி புத்தகம் பொதுவாக ஞான இலக்கியம் என அடையாளம் காணப்பட்ட தொகுப்பின் ஒரு பகுதியாகும். இந்த புத்தகம் வாழ்க்கையின் நெருக்கடிகளின் மத்தியில் வாழ்வதற்கான நடை முறை அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த புத்தகத்தில் சாலொமோன் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. பிரசங்கி (எபிரெய மொழியில் Qohelet)என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சாலொமோனே ஆசிரியராக அங்கீகரிக்கப்படுகிறார். 1இராஜாக்கள்11:1-10 , அவர் வயதாகும் போது, மற்ற தெய்வங்களை வழிபட அனுமதித்தார் என்று குறிப்பிடுகிறது. இது வாழ்க்கையை சுய சிந்தை கோணத்தில் பார்க்க வைக்கிறது. இருப்பினும், பிற்காலத்தில் அவர் யெகோவா தேவனின் வழிபாட்டிற்கு திரும்பியிருக்கலாம். இவ்வாறு, தேவனிடமிருந்து தூரம் சென்று அவரிடம் திரும்பியதிலிருந்து சாலொமோன் என்ன கற்றுக் கொண்டார் என்பதில் பிரசங்கி புத்தகம் நமக்கு சிறந்த பாடங்களைக் கொண்டுள்ளது. "தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக் கொள்" என்பது புத்தகத்தில் அவருடைய இறுதி வார்த்தைகள்.

இந்த இதழில் உள்ள கட்டுரைகளில், ஒவ்வொரு எழுத்தாளரும் உள்ளடக்கிய வசனங்களால் சுட்டிக்காட்டப்பட்டபடி, சாலொமோன் யெகோவா தேவனிடம் திரும்பிய பயணத்தின் சோதனையான அனுபவங்களின்படி எழுதப்பட்டவை.

"பிரசங்கியின் வார்த்தைகள்" **Qohelet**என்ற பாடம் (1:1-11) புத்தகத்தின் ஒரு முன்னோக்கு மற்றும் பூமிக்குரிய கண்ணோட்டத்தில் வாழ்க்கையின் மாயை பற்றிய கருப்பொருளை வழங்குகிறது.

@அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை" (1:12-2:26) என்ற பாடம் சாலொமோன் ஞானம் நிரம்பிய இளைஞனாக மகிமைக்குச் சென்றதையும், விக்கிரகாராதனைக்காரராக தேவனுடைய தயவில் இருந்து வீழ்ச்சியடைந்ததையும், சாலொமோனின் பயணத்தில் புது சிருஷ்டிகளுக்கான படிப்பினைகளையும் சுருக்கமாகக் கூறுகிறது.

"பிரசங்கியின் வாழ்க்கை மற்றும் பிரதிபலிப்புகள் பற்றிய கருத்துக்கள்" (**3:1-4:6**) என்ற பாடம், வாழ்க்கையின் பெரும்பகுதி ஒரு உறுதியான சுழற்சியின் ஒரு பகுதி என்று சாலொமோனின் கவனத்திற்கு இரண்டு கோணங்களை வழங்குகிறது. மனிதன் இன்னும் எதையாவது விரும்பினாலும், சிறிது காலமே திருப்தி அளிக்கும் வாழ்க்கை வட்டத்தின் அவன் ஒரு பகுதியாக இருக்கிறான்.

ஞானமான ஆலோசனை" (4:7-7:22) என்ற பாடம், செல்வத்தை காட்டிலும் ஞானமே மதிப்பு மிக்கது என்பதை விவாதிக்கிறது. உலகில் சோதனைகள் ஏராளமாக உள்ளது, தேவனின் வார்த்தைகள் மற்றும் பிரமாணங்களில் கவனம் செலுத்தும் வாழ்க்கை மட்டுமே உண்மையான திருப்தியைத் தரும்.

ஞானத்தின் தேவை" (7:23-9:18) என்ற பாடம், சாலொமோனின் "புனிதமற்ற ஸ்திரீ" பற்றிய தீர்க்கதரிசன தொடர்பைப் பற்றியும், "எல்லாக்காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு என்ற சாலொமோனின் கூற்றை பற்றியும் விவாதிக்கிறது."

வாழ்க்கை, பின்னோக்கிப் பார்க்கையில்",(10:1-12:7) என்ற பாடம் வயதாகும்போது ஏற்படும் சவால்கள் மற்றும் உயர்ந்த நோக்கம் மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை நாம் எப்படி வாழலாம் என்றும், இந்த வாழ்க்கையை நித்தியமாக முழுவதற்கும் உயர்வான நிலையில் எப்படி தொடரும் என்பதை பற்றி ஆராய்கிறது.

நிறைவுரை (12:8-14) என்ற பாடம், தேவனுடைய வார்த்தைகளும் மனிதனின் ஞானமும் செழிப்பாகவும், மிகுதியாகவும் இருக்கும் இந்த காலத்தில், தேவனின் பரிசுத்த வார்த்தையான வேதாகமத்தில் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிவுறுத்துகிறது.

இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற நாம் முயற்சி செய்யும் போது, இந்த இதழின் விவாதங்கள் நம் ஒவ்வொருவருக்கும் உத்வேகமாகவும், புத்துணர்ச்சியூட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்று நாம் ஜெபிக்கிறோம்.

**செப்டம்பர் / அக்டோபர் 2023, தொகுப்பு 105, எண் 4**

**பிரசங்கியின் வார்த்தைகள்** 2
யெகோவா தேவனை பின்தொடர்வதே வாழ்க்கையை சிறப்பிக்கும்

**அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை** 6
ஞானத்தைத் தேடும் இருதயம்

**வாழ்க்கையைப் பற்றிய அவதானிப்புகள்** 13
ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒரு காலம்

**பிரசங்கியின் பிரதிபலிப்புகள்** 18
தொடர்ந்து வரும் ஒரு கருத்து

**ஞானமான ஆலோசனை** 25
பொருட்களுக்கு மேலான உறவுகள்

**ஞானத்தின் தேவை** 32
விலைமதிப்புள்ள பொருள்

**வாழ்க்கை, பின்னோக்கிப் பார்க்கையில்** 36
வாழ்க்கையின் பாடங்கள்

**இறுதியிரை** 41
ஒவ்வொரு செயலின் 47

## யெகோவா தேவனை பின்தொடர்வதே வாழ்க்கையை சிறப்பிக்கும்
# பிரசங்கியின் வார்த்தைகள்




*Len Griehs*

"ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது." (பிரசங்கி1:4)

நீண்ட காலமாக உணர்ச்சிகரமான இன்பங்களில் ஈடுபட்ட எழுத்தாளர், வாழ்க்கையின் பிற்பகுதியில் பிரசங்கி புத்தகத்தை எழுதினார். யெகோவா தேவனையும் அவருடைய நீதியையும் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்ற முடிவை இந்த புத்தகம் கூறுகிறது. ஆசிரியர் தான் கவனித்ததை ஆரம்பத்தில் பகிர்ந்து கொள்கிறார். "மாயை, மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறார்." (வசனம் 2) லத்தீன் மொழியை நன்கு அறிந்த பதினேழாம் நூற்றாண்டு மனுஷர், AV மொழிபெயர்ப்பில், "மாயை" (Vanity) என்பதற்கு "மதிப்பு இல்லாமை" என்று பொருள் கூறுகிறார்கள். நவீன மொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தைக்கான சிறந்த அர்த்தத்தை கண்டுபிடிக்க முயற்சித்தன. சிலர் "பயனற்ற தன்மை" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்கள்.

கிங் ஜேம்ஸ் பதிப்பில் "vanity " என்ற மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தை "ஹெவல்" (hevel) {ஸ்ட்ராங்ஸ் 1892}. எபிரெய அறிஞரும் மொழிபெயர்ப்பாளருமான ராபர்ட் ஆல்டர் (*The Wisdom Books, The Five Books of Moses, The Book of Psalms, The David Story*)இந்த வார்த்தையை "வெறும் சுவாசம்" என்று மொழிபெயர்த்திருக்கிறார். வசனம் பற்றிய அவரது சொந்த விளக்கவுரையில், குளிர் காலத்தில், யாராவது சுவாசிக்கும்போது விரைவாகச் சிதறும் நீராவியின் நிலைக்கு இந்த வார்த்தையை ஒப்பிடுகிறார். இதை நாம் பொதுவாக "உங்கள் சுவாசத்தைப் பார்த்து" என்று அழைக்கிறோம். ஆதியாகமம் 6:17ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "உயிர் சுவாசம்" என்பதை விவரிக்கும் ருவாச் (Strong's 7307) என்ற வார்த்தையை பெரும்பாலான வேதமாணவர்கள் நன்கு அறிந்திருக்கிறோம். அந்த சுவாசம் ஒரு உயிரினத்திற்கு ஜீவனைக் கொண்டுவருகிறது. அதே நேரத்தில் சாலொமோன் இங்கே தற்காலிகமான ஒன்றை அதாவது இன்பம்



*Leo Tolstoy*

முடிந்ததும் மறைந்துவிடும் என்று விவரிக்கிறார். இறுதியில், பிரசங்கி இன்பத்தைத் தேடுனது ஒரு ஏமாற்றத்தை அளித்தது என்றும் நீடித்த மகிழ்ச்சியை அது கொடுக்கவில்லை என்றும் கூறுகிறார்.

*The Herald of Christ's Kingdom* என்ற இந்த பிரதியில், பிரசங்கியை வாசிக்கும் மாணவர்கள் எளிதில் தவறிவிடக்கூடிய தெய்வீக ஞானத்தை ஆராய்வோம்.(2தீமோத்தேயு 3:16) தொடக்க வசனம் எழுத்தாளரை பிரசங்கி என்று அடையாளப படுத்துகிறது. பிரசங்கி என்ற வாத்தையின் எபிரெய பதம் - "கோஹெலெட்" (Qohelet) அவர் தன்னை "தாவீதின் குமாரன்" என்று அடையாளப்படுத்துகிறார். யூத மற்றும் கிறிஸ்தவ முறையின்படி தன்னுடைய பெயரை குறிப்பிடவில்லை என்றாலும், இராஜாவாக எழுத்தாளரை தன்னை அடையாளப்படுத்துவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவதாக, இதன் கருத்து, ஞானத்திற்கான தேடலை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. இதற்கு இணையாக 2நாளாகமம் 1:10ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, ஞானம் மற்றும் அறிவுக்காக சாலொமோன் யெகோவா தேவனிடம் செய்த வேண்டுகோள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது காரணம் - அவரது சொத்துக் குவிப்பு மற்றும் தனிப்பட்ட சிறப்பான சாதனைகள் குறித்து 2:4 ல் விவரிக்கப்படுகிறது. இந்த இரண்டு காரணங்களைப் பற்றி இந்த இதழின் பின்வரும் கட்டுரைகளில் ஆராய்ப்படுகின்றது.



King Solomon

## வாழ்க்கையின் பயனற்ற தன்மை

*War and Peace* என்ற புத்தகத்தின் ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் பின்வருமாறு எழுதுகிறார் - "வாழ்க்கை அர்த்தமற்றது என்பதே மனிதனால் அடையக்கூடிய ஒரே முழுமையான அறிவாகும்." வாழ்க்கை எப்படி அர்த்தமற்றது என்பதையும், மரணம் மட்டுமே ஒருவருக்கு ஒரே முடிவு, அது எப்போது, எங்கு, எப்படி நிகழும் என்பதை தேர்ந்தெடுப்பதுதான் பல வருடங்களாக சொல்லியும் எழுதியும் வந்த எர்னஸ்ட் ஹெமிங்வே.(The Old Man and the Sea, The Sun Also Rises) ஜூலை 2,1962 அதிகாலையில் எழுந்து தற்கொலை செய்து கொண்டார். 1978, ராக் இசைக்குழு கன்சாஸ் எழுதிய "*Dust in the Wind*,"ல் பதிவு செய்த, முதன்மையான பாடல் வரிகள்.

அதே பழைய பாடல், ஒரு சொட்டு தண்ணீர் முடிவில்லா கடலில்,

நாம் செய்யும் அனைத்தும் தரையில் இடிந்து விழும், நாம் பார்க்க மறுத்தாலும்,

காற்றில் உள்ள தூசி, நாம் அனைவரும் காற்றில் உள்ள தூசி.

டால்ஸ்டாய் மற்றும் ஹெமிங்வே, வாழ்க்கையில் மகத்துவத்தை அடைந்த மனிதர்கள், அவர்கள் சாதிக்க முடிந்ததை மட்டுமே நம்பினார்கள். இதன் விளைவாக, "காற்றில் உள்ள தூசி" என்று அவர்கள் அதிருப்தியின் வெற்று உணர்வைக் கண்டார்கள். இவர்கள் குறிப்பிட்ட வாழ்க்கை வகையானது, சாலொமோன் 3ம் வசனத்தில் மாயை (பயனற்றது)என்று சுருக்கமாகக் கூறினார்.

வசனம் 4 -"ஒரு சந்ததி போகிறது மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது."(ஓலாம், ஸ்ட்ராங் 5769) இந்த வசனம் வேத மாணவர் இலக்கியங்களில் பூமி பேரழிவாக அழிக்கப்படாது அல்லது எரிக்கப்படாது என்பதற்கான சான்றாக விரிவாகக் காணப்படுகிறது.

இந்த விளக்கத்தை ஏசாயா உறுதிப் படுத்துகிறார். "வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் (*tohuw*, Strong's 8414)சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது - நானே கர்த்தர் வேறொருவர் இல்லை." (ஏசாயா 45:18) Astronomy.com என்ற இணையத்தளம் பூமியின் முடிவை முன்னறிவிக்கும் நீண்ட கால காட்சிகளைக் கொண்டுள்ளது. சாத்தியமான சிறுகோள் தாக்குதல்கள், சூப்பர் நோவா குண்டுவெடிப்புகள் அல்லது பிற பேரழிவுகள் ஆகியவற்றிலிருந்து பூமியில் உள்ள உயிர்களின் மோசமான அழிவை இது முன்னறிவிக்கிறது.

"இறுதியில், வளிமண்டல கரியமில வாயு (carbon dioxide) கட்டுபாட்டை இழக்கும் நிலையை இந்த பூமி வந்தடையும். அந்த நேரத்தில், ஒளிச்சேர்க்கையை நம்பியிருக்கும் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யும் தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் இறந்துவிடும். மனிதர்களுக்கும் மற்ற மிருகங்களுக்கும் தேவைப்படும் ஆக்ஸிஜன் நிறைந்த வளிமண்டலத்தைத் தக்கவைக்க நம்முடைய கிரகத்தில் போதுமான உயிரினங்கள் இருக்காது. அது எப்போது தொடங்கும் என்றும் எவ்வளவு நேரம் எடுக்கும் என்பதற்கான துல்லியமான நேரம் - சுமார் 10,000 ஆண்டுகளில் இந்த செயல்பாடு நிறைவடையலாம் (the deoxygenation process) - இரு பரந்த அளவிலான காரணிகளைப் பொறுத்ததே.

**ஒரு நேர்மறையான (நன்மைக்கு) எதிர்காலம்**

எதிர்காலத்தைப் பற்றிய இந்த அவலமான பார்வை பலரை வாழ்க்கைக்கு பதிலாக மரணத்தைத் தேர்ந்தெடுக்கும்படி செய்துள்ளது. இருப்பினும், அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்தை வேதாகமம் முன்னறிவிக்கிறது. ஆதியாகமம்1:1 ல்

ஆரமித்த சிருஷ்டிப்பை முழுமைப்படுத்துவதே யெகோவா தேவனுடைய நோக்கம். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." பாவத்தின் அனுபவத்தால் கறைபடிந்த சமூகத்தின் மறுசீரமைப்பின் மூலம் இது நிறைவேற்றப்படும். "பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன், முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின..." (வெளிப்படுத்துதல்21:1) பூமி முன்னிருந்த பரதீஸ் நிலைமைக்கு முழுமையாக திரும்பும்போது, பூமியானது மனுஷ வாழ்க்கையை நித்தியமாக ஆதரிக்க முடியும். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் அனைவராலும் மகிழ்ச்சியும் சமாதானமும் வரவேற்கப்படும்.

வசனங்கள் 8-10 "எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது, அது மனுஷரால் சொல்லிமுடியாது, காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை. முன் இருந்ததே இனிமேலும் இருக்கும், முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும், சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை."

பாருங்கள், இது புதியது என்று சொல்லுவதற்கு ஏதாவது உண்டா? இது ஏற்கனவே பழங்காலத்தில் நமக்கு முன் இருந்தது. "முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை, அப்படியே பின்வரும் காரியங்களைப் பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு ஞாபகம் இராது" (வசனம் 11)

"எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது "என்ற சொற்றொடர், மற்றொரு இடத்தில்" எல்லா விஷயங்களும் சோர்வாக உள்ளது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்று மனிதனுக்கு சிறிதளவும் மகிழ்ச்சி இல்லை என்ற எதிர்மறையான குறிப்போடு சாலொமோன் தம்முடைய அறிமுகத்தை நிறைவுச் செய்கிறார். "மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன ?" என்ற கேள்வியை அவர் கேட்கிறார். துரதிர்ஷ்டவசமாக, ஆபிரகாமின் சந்ததியின் மூலம் பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தை சாலொமோனால் தன் மூதாதையரான ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை புரிந்துகொள்ள முடியவில்லை. (ஆதியாகமம்22:18) பாவம் அனுமதிக்கப்பட்டுள்ள காலகட்டம், பெரும்பாலான மனுக்குலத்திற்கு இருண்ட இரவாக உள்ளது. இந்த நேரத்தை ஒருபோதும் ஒருவரும் மறக்க முடியாதபோதிலும், இதுவே பூமியின் எதிர்காலம் அல்ல! அழுகை, பெருமூச்சு, வலி, நோய் மற்றும் மரணம் போன்ற பயங்கரமான இரவை எதிர்கொள்வதற்கான ஆரோக்கியத்தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும் கிறிஸ்துவின் ஆட்சியில் நீதி மற்றும் தெய்வீக தயவின் ஒரு மகிமையான காலம் வருகிறது. ஏகமாக தவிக்கும் சிருஷ்டிகள் பலர் சாலொமோனின் பயங்கரமான கண்ணோட்டத்தைப் பற்றி நினைத்திருக்கிறார்கள். "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங்கீதம்30:5)

## ஞானத்தைத் தேடுவதற்கான ஒரு இருதயம்
# அனுபவங்களினால் ஒரு வாழ்க்கை



*David Wiant*

"பிரசங்கியாகிய நான் எருசலேமில் இஸ்ரயேலருக்கு இராஜாவாயிருந்தேன். வானத்தின் கீழ் நடப்பதையெல்லாம் ஞானமாய் விசாரித்து ஆராய்ச்சி செய்கிறதற்கு என் மனதைப் பிரயோகம் பண்ணினேன், மனுபுத்திரர் இந்தக் கடுந்தொல்லையில் அடிபடும்படிக்கு தேவன் அதை அவர்களுக்கு நியமித்திருக்கிறார்." (பிரசங்கி1:12-13)

" வரலாற்றில் சிலர் யெகோவா தேவனிடமிருந்து ஞானத்தைப் பெற்றார்கள். சாலொமோன் அவர்களில் ஒருவர். அவர்கள் இஸ்ரயேலின் இராஜாவானபோது, தெய்வீக வழிகாட்டுதல் இல்லை என்றால், அவர் தோல்வியடைவார் என்பதை அவர் அறிந்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக, அவர் இறுதியில் தனது சொந்த வல்லமை மற்றும் செல்வாக்கின் பெருமையால் வெல்லப்பட்டார். தேவனிடமிருந்து பரிசாகக் பெற்ற ஞானம், இரண்டாம் பட்சமானது, அவர் உலக இன்பத்தைத் தேடுவதற்கு அதை பயன்படுத்தினார். இந்த மாற்றத்தின் போது அவரது சொந்த வார்த்தைகளிலிருந்து கிடைக்கும் பாடங்கள், அவர் பெற்ற பரிசாகிய ஞானத்துடன், பரிசுத்த ஆவியின் மூலம் வழங்கப்படும் பாடங்கள், புது சிருஷ்டிகளாகிய நமக்கு மிகவும் மதிப்புமிக்கது.

அவருடைய ஆட்சியின் ஆரம்பத்தில், சாலொமோன் இவ்வாறு ஜெபித்தார்-: "இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே இராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும், ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்." (1இராஜாக்கள்3:7, 9) தேவனுடைய பார்வைக்கு இந்த விண்ணப்பம் உகந்ததாக இருந்தது. (வசனம் 10) அவர் சாலொமோனுக்கு நன்மை மற்றும் தீமை, சரி மற்றும் தவறு ஆகியவற்றைப் பகுத்தறிந்து நியாயமாக தீர்ப்பளிக்கும் திறனோடு, செல்வம், அதிகாரம், மரியாதை மற்றும் மகிமை ஆகியவற்றை கொடுத்தார். "இதிலே உனக்குச் சரியானவன் உனக்கு முன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவது மில்லை."(1இராஜாக்கள்3:12)



*Solomon's Temple*

பூமியிலுள்ள எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியை தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை சாலொமோன் தன் தகப்பன் தாவீதிடமிருந்து அறிந்து கொண்டிருக்கலாம். (ஆதியாகமம்12:22) இந்த வாக்குத்தத்தம் ஈசாக்குக்கும், யாக்கோபிற்கும், பின்னர் யாக்கோபின் பிள்ளைகளுக்கும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி தாவீது இராஜா தன் மகனிடம் சொல்லி யிருக்கலாம். ஒரு இளைஞனாக அரியணை ஏறியபோது, தெய்வீக வழிகாட்டுதலின்றி ஜனங்களை ஆளும் பணியைச் செய்யத் தயாராக இல்லாத சாலொமோன் தன்னை இந்த வாக்குறுதியின் ஒரு பகுதியாகக் கருதியிருக்கலாம்.

## சாலொமோனின் மகிமை

சாலொமோன் கட்டவும், படைக்கவும், யெகோவா தேவன் அனுமதித்து, ஊக்குவித்தார் பண்டைய இஸ்ரயேலின் தலைநகரமான எருசலேமில் பிரம்மாண்டமான ஆலயத்தை எழுப்பியதே சாலொமோன் இராஜாவின் ஆட்சியின் கீரிடமான சாதனையாக இருந்தது. அவருடைய தந்தையான தாவீது இராஜா, பத்துக் கட்டளைகளைக் கொண்ட உடன்படிக்கைப் பெட்டி நிரந்தரமாக தங்குவதற்கு முன்னதாகவே, ஒரு பெரிய ஆலயத்தை கட்ட விரும்பினாா். இருப்பினும், ஒரு தெய்வீக கட்டளை அவ்வாறு செய்வதற்கு தாவீதைத் தடை செய்தது. "ஆனாலும் தேவன் - நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம், நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்." (1நாளாகமம்28:3)



*Charles Russell, author, "The Divine Plan of the Ages."*

கட்டிடங்களை கட்டுவதற்கான எந்த செலவையும் சாலொமோன் குறைக்கவில்லை. அவர் தீருவின் இராஜாவாகிய ஈராமிடம் இருந்து ஏராளமான கேதுரு மரங்களை வாங்கினார். (1இராஜாக்கள் 5: 5-10) அவருக்காக மிக பெரிய சிறந்த கற்கள் வெட்டப்பட்டது. கட்டிடத்தின் அடித்தளம் வெட்டப்பட்ட கற்களால் அமைக்கப்பட உத்தரவிட்டார். மாபெரும் திட்டத்தை முடிக்க, அவர் தனது அனைத்து குடிமக்களையும் கட்டாயமாக வேலைக்கு அமர்த்தினார். சில நேரங்களில் ஒரு மாதம் நீடிக்கும் வேலைக்கு ஆட்களை மாற்றி அமைத்தார். ஆலயத்தின் கட்டுமானத்தை மேற்பார்வையிட சுமார் 3,300 அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். (வசனம் 13-18) ஆலயத்தைக் கட்டுவதில் சாலொமோன் மிக பெரிய கடன்களைச் சுமந்தார். கலிலேயாவில் உள்ள இருபது பட்டணங்களை இராஜாவாகிய ஈராமுக்கு செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (1இராஜாக்கள்9:11)

ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதும், சாலொமோன் அதை ஜெபத்துடனும் பலிகளுடனும் திறந்து வைத்தார், மேலும் புறஜாதியாரையும் அங்கு வந்து ஜெபிக்கும்படி அழைத்தார். அவர்களின் ஜெபங்களுக்கு குறிப்பாக கவனம் செலுத்தும்படி தேவனை அவர் வேண்டிக்கொண்டார். "உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலைப் போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத்தக்கதாக, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படி யெல்லாம் தேவரீர் செய்வீராக... " (1இராஜாக்கள்8:43) சாலொமோன் இங்கு நிறுத்தியிருந்தால், அவரது வாழ்க்கையின் விளைவு மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கலாம்.

சாலொமோன் தனது இருதயத்தில் விரும்பிய அனைத்தையும் ஆராய்வதற்கு யெகோவா தேவன் அனுமதித்தார், ஆனால் அவர் ஒரு எச்சரிப்பை கொடுத்தார் - அது அவருக்காக மட்டுமல்ல, யெகோவா தேவனுடன் செய்த உடன்படிக்கையினால் அவரோடு ஐக்கியம் கொண்ட முழு தேசத்திற்கும் கொடுத்தார். இருந்தபோதிலும், சாலொமோன் தனிப்பட்ட முறையில் எவ்வாறு பெரியவரானார் என்றும், தனக்கு முன் இருந்த அனைவரையும் விட அதிகமாக வளர்ந்தார் என்பதையும் சிந்தித்தார். அவர் ஒரு அசாதாரணமாக கட்டிட நிபுணராகவும், தோட்டக்காரராகவும், அமைப்பாளராகவும், தலைவராகவும், மத்திய கிழக்கு உலகம் முழுவதும்



*The glory of Solomon, with the Queen of Sheba*

பிரபல அந்தஸ்தை அனுபவித்தார். தேவனுக்கு மகிமையைக் கொடுப்பதற்குப் பதிலாக, இவைகளை சாலொமோன் தனது சொந்த சாதனைகளாக உணர்ந்து, பெருமைக் கொண்டார்.

"நான் பெரிய வேலைகளைச் செய்தேன், எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சத் தோட்டங்களை நாட்டினேன். எனக்காகத் தோட்டங்களையும் சிங்காரங்களையும் உண்டாக்கி, அவைகளில் சகலவகைக் கனிவிருட்சங்களையும் நாட்டினேன், மரங்கள் பயிராகும் தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் குளங்களை உண்டுபண்ணினேன். வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் சம்பாதித்தேன், வீட்டிலும் வேலைக்காரர் பிறந்தார்கள், எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும் ஆடு முதலான திரண்ட ஆஸ்திகள் எனக்கு இருந்தது. வெள்ளியையும் பொன்னையும், இராஜசம்பத்தையும் மாகாணங்களிலுள்ள பொருள்களையும் சேகரித்தேன், சங்கீதக்காரரையும் சங்கீதக்காரிகளையும், மனுபுத்திரருக்கு இன்பமான பலவித வாத்தியங்களையும் சம்பாதித்தேன்"(பிரசங்கி2:4-8)

சாலொமோன் மனிதனின் சீரழிவை ஆராய்ந்தார், ஒருவேளை யெகோவா தேவனை அறியாதவர்களிடமிருந்து எழும் கேள்விகளுக்கான பதில்களைத் தேடினாரோ! ஆரம்ப காலத்தில் ஜனங்களை ஆளுவதற்கு ஞானத்திற்காக வேண்டினதைப் போலல்லாமல் சாலொமோன் மகிழ்ச்சியையும், சாதனைகளையும், உலகப் பொருட்களையும் தேடினார். ஆனால் அவர் இருளையும் பயனற்ற தன்மையையும் மட்டுமே கண்டார். இது பொதுவாக மனுக்குலத்தின் குழப்பமான பிரச்சனைகள். இந்த தீமையின் அனுமதியின் காலத்தில் அனுபவிக்கப்படுகிறது.

தீமைக்கான அனுமதியின் இந்த காலம், பெரும்பாலான சீர்திருத்தவாதிகள் காணவில்லை என்று "யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாடு" என்ற தொகுப்பில் சகோ. ரசல் எழுதினார். மேலும், வரக்கூடிய எதிர்காலத்தில் முழு மனுக்குலமும் முந்தைய அனுபவத்திற்கு நேர்மறையான, நீதியை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த தீமையின் காலம் அவர்களை ஆயத்தப்படுத்துகிறது. மனிதனின் படிப்பினைகள் மிகவும் கடினமானவை, ஆனால் இறுதியில் பாவத்தால் உருவாக்கப்பட்ட பிரச்சனைகளை வெல்வதில் விலைமதிப்பற்றதாக இருக்கும். அநீதியை ஒழிக்கவும், ஜனங்களுக்கு செழிப்பும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவதற்கு பல முன்மொழியப்பட்ட தீர்வுகளை ஏற்றுக்கொள்ள அரசாங்கங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன, ஆனால் எதுவும் வெற்றி பெறவில்லை. இந்த நீண்ட இருண்ட காலம் அடுத்த யுகத்தில் நினைவுகூரப்படும், மேலும் "எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருந்தால், அல்லது நம்மை நாம் ஆளும் வாய்ப்பு கிடைத்திருந்தால் நாம் வெற்றி பெற்றிருப்பேன்" என்ற பயனற்ற முயற்சிகளை யாரும் கோர முடியாது. (Studies in the Scriptures, Volume 1)

சாலொமோன் தனது சொந்த பாதையைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டார், ஆனால் யெகோவா தேவனுடைய ஆசீர்வாதமின்றி செழுமையையும் மகிழ்ச்சியையும் தேடுவது பயனற்றது என்பதை அவர் இறுதியில் உணர்ந்தார்.

### சாலொமோனின் செழிப்பு

ஷேபாவின் இராஜஸ்திரி, சாலொமோனின் சாம்ராஜ்யத்தை கண்டு வியந்துபோனாள். "அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும் அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு இராஜாவை நோக்கி - உம்முடைய வர்த்தமானங்களையும், உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நாம் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை. இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன் நான்

கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள் எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள். உம்மை இஸ்ரயேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உம்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக, கர்த்தர் இஸ்ரயேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை இராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள். " (1இராஜாக்கள் 10:5-9)

ராணியின் கடைசி வார்த்தைகள் சாலொமோனின் இருதயத்தை ஒரு நாள் பிளந்திருக்கும். தன் வேலைகளை யெகோவா தேவன் ஆசீர்வதித்ததற்காக அவருக்கு நன்றியுடன் இருப்பதற்கு பதிலாக, சாலொமோன் இறுதியில் அதிருப்தியை வெளிப்படுத்தினார். அவர் தனது ஜனங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க பாரம்பரியத்தை விட்டுச் சென்றிருக்கலாம், ஆனால் அவரைப் பற்றிய நினைவு வரலாற்றில் இருந்து மறைந்தது. மனிதர்கள் என்ன செய்தாலும், எதை சொந்தமாக்கி கொண்டலும், அவர்கள் என்ன அறிந்திருந்தாலும், அவர்கள் யாராக இருந்தாலும், எதையும் பொருட்படுத்தாமல், எல்லாரும் மரித்துபோவார்கள் என்ற எண்ணத்தில் அவர் வாழ்ந்தார். தானும் இறந்துவிடுவோம் என்றும், தான் செய்த அனைத்து வேலைகளும், இதற்கு தகுதி இல்லாதவர்களின் கைக்கு சென்று விடும் என்ற உண்மையினால் விரக்தியடைந்தார். அவர் விரைவில் மறக்கப்படுவார். அவரது யோசனைகளும் கூட மறைந்துபோகும் என்று சிந்தித்தார். "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன், இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை." (பிரசங்கி 2:11) "ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன்... எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. (வசனம் 17)

இதுவரை வாழ்ந்த ஞானமான மனுன் என்று கூறப்படும் சாலொமோன் தனது செல்வச் செழிப்பு வாழ்க்கையை திருப்தியற்றதாகவும், நிலையற்றதாகவும், விரைவானதுமாகவும் கண்டார். "சூரியனுக்குக்கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன், எனக்குப் பின்வரப் போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போக வேண்டியதாகுமே. " (பிரசங்கி 2:18)

**புது சிருஷ்டிக்கான பாடங்கள்**

யெகோவா தேவனுக்கு மகிமையாகவும், கனத்திற்குரிய ஒரு இராஜ்யத்தை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்தையும் தேவன் சாலொமோனுக்குக் கொடுத்தார். மேலும் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தையும் " (எபிரெயர் 10:22) தேவன் இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு வாக்களித்தார். அவருடைய பிள்ளைகள், கிறிஸ்து இயேசுவுக்குள் பரம அழைப்பின் பந்தையப் பொருளை பின்தொடர்வதற்கு எந்தக்

குறையும் இல்லை. (பிலிப்பியர்3:14, 15) நாம் அதை பற்றிக்கொள்ள வேண்டும். சாலொமோனின் ஞானமும், தேவனுடைய ஆசீர்வாதமும் போதுமானதாக இருந்திருக்க வேண்டும். அவர் தேவனுடைய மகிமைக்கு இஸ்ரயேலைக் கட்டியெழுப்பியிருக்க முடியும். மேலும் ஜனங்களுக்கு பெரும் ஆசீர்வாதங்களையும் வழங்கியிருக்க முடியும். ஆனால் அவரது பெருமை அவரை வென்றது. தேவனுக்குப் பிரியமான ஒரு குணலட்சனம் உருவாக்குவதற்கான முதல் படி மனத்தாழ்மை என்பதை இதில் நாம் காண்கிறோம். (மத்தேயு 5:3) நம் வாழ்வில் அவருடைய பிரசன்னத்தில் மகிழ்வதில், நம்முடைய விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள எதுவாக இருந்தாலும் சரி, அது ஏழ்மையாக இருந்தாலும், செல்வமாக இருந்தாலும், தேவனுடைய ஆசீர்வதத்துடன் ஒப்பிடுகையில் அது குறைவாக அல்லது மங்கலாக தோன்ற வேண்டும்.

இராஜ்யம் மகிமையாகவும் பிரமாதமாகவும் மாறியதற்கு ஆதாரமாக சாலொமோன் தன்னையே கண்டார். அவரது வாழ்க்கையின் உச்சத்தில், சாலொமோனுக்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தனர். குதிரைகளுடன் கூடிய 40,000 குதிரை லாயங்களையும், அவற்றை சவாரி செய்ய 12,000 ஆட்களையும் வைத்திருந்தார். ஆனாலும் அவருக்கும் சந்தோஷம் குறைவாக இருந்து. அவர் தனது வாழ்க்கையை சில வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறினார் - "மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப்பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையுமில்லை, இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்." (பிரசங்கி2:24)

எந்த உலக இன்பமும் நித்திய திருப்தியைத் தராது, மாறாக அது நித்திய வருத்தத்திற்கு வழிவகுக்கும். தெய்வீகமாக அவருடைய ஆட்சி துவங்கியிருந்தாலும், அதற்கு பின் அவர் அதை இழந்ததினால், சாலொமோன் உலகின் சுழற்சிகளின் ஒரு பகுதியாக மாறினார். உயிர்த்தெழுதலில், சாலொமோன் பூமியிலுள்ள ஜனங்களுக்கு அறிவுரை வழங்குவோர் மத்தியில் ஒரு பங்கைப் பெற்று அவர் கற்றுக் கொண்ட பாடங்களை எதிரொலிப்பாரா? இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.

சாலொமோனின் குறைகளை நாம் சிந்திக்கையில், தெளிந்த புத்தியுள்ள ஆவியின் ஞானத்தின் மூலம் யெகோவா தேவன் நமக்கும் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பிரதிபலிக்கும் வாய்ப்புகளை நாம் நினைவில் கொள்வோம். "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது." (யாக்கோபு3:17,18)

ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒரு காலம்


# வாழ்க்கையைப் பற்றிய அவதானிப்புகள்



Keith Belheumer

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு" (பிரசங்கி 3:1)

**சா**லொமோன் இராஜா யூத வரலாற்றில் மிகவும் பிரபலமான இராஜாக்களில் ஒருவர். இவர் தாவீதின் குமாரர்களில் ஒருவர். (2சாமுயேல்5:14) யெகோவா தேவனால் அவர் எதிதியா என்று நாத்தான் தீர்க்கதரிசி மூலம் அழைக்கப்பட்டார். இதற்கு "யெகோவா தேவனுக்கு பிரியமானவர்" என்ற பொருள். இருப்பினும், அவருடைய தாய் பத்சேபாள் அவருக்கு சாலொமோன் என்று பெயரிட்டாள். (2சாமுயேல்12:24-25) சாலொமோன் 40 வருடங்கள் இராஜ்யத்தை ஆட்சி செய்தார். பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் அவரது ஆட்சிக்காலம் தோராயமாக கிமு 970 முதல் கிமு 931 வரை என்று கூறுகிறார்கள். தேவன் சாலொமோனுக்கு தந்த பரிசாகிய ஞானத்தை, தேவனுடைய வார்த்தையில் பாதுகாத்து வைத்தார்.



King David, father of Solomon

அதிலிருந்து பெறப்பட்ட நுண்ணறிவுகளை அவர் வழங்கினார். நாம் புரிந்து கொண்ட கோட்பாடுகளை உறுதிப்படுத்த உதவுகிறார். நம்முடைய அர்ப்பணிப்பின் பயணத்தில் என்ன செய்யக்கூடாது என்பதற்கும் ஒரு உதாரணம் தருகிறார்.

## எல்லாவற்றுக்கும் ஒரு காலம் உண்டு

வானத்தின் கீழ் எல்லாவற்றிற்கும் அல்லது ஒவ்வொரு நோக்கத்திற்கும் பொருத்தமான காலம் இருப்பதை சுட்டிக்காட்டுவதன் மூலம் தனது வாழ்க்கையைப் பற்றிய அவதானிப்புகளைத் தொடங்குகிறார்.

வசனம் ஒன்றில், "சூரியனுக்குக் கீழே" என்பதற்குப் பதிலாக "வானத்தின் கீழ்" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டு, தெய்வீக முன்னோக்கைக் குறிக்கிறது. வாழ்க்கையின் இயற்கையான நிகழ்வுகளான குழப்பமான அல்லது கடினமான சூழ்நிலைகளை நாம் அனைவரும் கடந்து செல்கிறோம். வாழ்க்கையில் காலங்கள் இருப்பதைப் போலவே, குறிப்பாக பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு தெய்வீக நோக்கம் உள்ளது. இந்த தனிப்பட்ட அனுபவங்கள் நம்முடைய நன்மைக்காகவே உள்ளது. எசேக்கியேல்



*Dust to Dust*

தரிசனத்தில் பார்த்த சுழலும் சக்கரங்களைப் போலவே, சில சமயங்களில் கொந்தளிப்பாகத் தோன்றும் அனுபவங்கள் யெகோவா தேவனின் பார்வையில் சரியான வரிசையில் இயங்குகின்றன.

பிரசங்கி 3:2-8ல் சாலொமோன் வாழ்க்கையின் தொடர்ச்சியான நிகழ்வுகளை விவரிக்க "காலங்களை" பயன்படுத்துவதைக் கவனிக்கலாம். இது தீர்க்கதரிசன "காலங்களுடன்" குழப்பிவிடக் கூடாது. இது ஒருவரின் வாழ்க்கையில் ஒரு சூழ்நிலைக்கு பயன்படுத்தப்படுகிறது. பூமியில் வாழும் வாழ்க்கையின் நிலையற்ற மற்றும் மாறக்கூடிய இயல்பு இதுதான். விசுவாசத்தினால், எவ்வாறாயினும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். (ரோமர்8:28) நாம் பொறுமையுடன் காத்திருந்தால், நமக்கான தேவனுடைய நோக்கத்தை ஏற்ற காலத்தில் அவர் நிறைவேற்றுவார். "ஏற்றவேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும்."(சங்கீதம் 104:27)


## தொழிலாளர்களின் லாபம்

பிரசங்கி 3: 9-15இல், எந்த உழைப்பும் வீணான முயற்சியாக இருப்பதால், நாம் ஏன் கடினமாக உழைக்கிறோம் என்ற ஒரு கேள்வியை சாலொமோன் முன்வைக்கிறார். "இதனால் என்ன பலன்?" என்பதே அவருடைய மனப்பான்மையாக தோன்றுகிறது. பிரசங்கி 1:3இல் தனது திறப்பு வளாகங்களில் ஒன்றை சாலொமோன் மீண்டும் கூறுகிறார். "சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன ?" "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன், இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது, சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை." (பிரசங்கி 2:11) அவர் பிரசங்கி 5:15, 16இல் இந்த உணர்வை மீண்டும் கூறுகிறார். அதை ஒரு மோசமான தீமை என்று அழைத்தார். அர்த்தமற்ற ஒரு நிலையைப் பற்றி கடுமையான கண்ணோட்டத்துடன் சாலொமோன் தொடங்குகிறார். தேவனுடன் உறவு இல்லாமல் வாழ்க்கை வீணாக தோன்றும் என்பது அப்பட்டமான உண்மை என்கிறார்.

நம்முடைய ஆர்வங்கள் உலகத்திலும் அதற்கு தொடர்புடைய விஷயங்களிலும் இருந்தால், நாம் எவ்வளவு விரைவாக விரக்தியின் ஆழத்தில் விழ முடியும் என்பதை சாலொமோன் காட்டுகிறார். இருப்பினும், யெகோவா தேவனின் அற்புதமான குணத்தையும் அன்பையும் வாசகருக்கு நினைப்பூட்டும் மாற்றுக் கருத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார். "அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார், உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார், ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்." (பிரசங்கி 3:11)

எல்லாவற்றையும் மறுசீரமைக்கக்கூடிய காலங்கள் ஏற்கனவே தொடங்கிட்டதால், நாம் பல ஆசீர்வாதங்களுடன் ஒரு அற்புதமான காலத்தில் வாழ்கிறோம். சாலொமோன் நோக்கத்தின் ஒரு சிறிய பார்வையை மட்டுமே கொண்டிருந்தார். "ஆதலால் ஆதி முதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" என்பதே சாலொமோனின் கருத்து. ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் இந்த கருத்து குறிப்பிடத்தக்க வகையில் மாறிவிட்டது. தேனுடைய திட்டம் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது தேவன் ஆதி முதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியைகளுக்கு ஒரு நோக்கம் இருப்பதை, காணக்கூடிய கண்களும், புரிந்துகொள்ளும் இருதயமும் அறிந்து கொள்கிறார்கள். இது தீர்க்கதரிசிகள், இயேசு மற்றும் அப்போஸ்தலர் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இது சாலொமோன் காலத்தில் கிடைக்காத ஒரு பாக்கியம். ஆதி முதல் அந்தம் வரை தேவன் செய்த வேலையை அறிந்துகொள்ளும் பாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசாயா 40:21)

சாலொமோன் அதை நடைமுறையில் எழுதுகிறார் - "மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம். தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிறைக்கும் என்று அறிவேன். அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது, மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார். முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது, இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது, நடந்ததையோ தேவன் விசாரிப்பார்." (பிரசங்கி 3:12-15)



*All will be raised again.*

நமக்கு அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளும் நினைவுப்படுத்தப்படுகிறது. "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1கொரிந்தியர் 10:31) நம்முடைய உழைப்பும், சோதனைகளும், துன்பங்களும் வீண் போகாது.

## மண் மண்ணுக்கு திரும்பும்

பிரசங்கி 3:16-22 இல் சாலொமோன் மீண்டும் முன்னோக்கை மாற்றுகிறார். நாம் இப்போது புரிந்துகொண்ட ஒரு காரியத்தை அதாவது, ஒரு காலத்திற்கு தீமையின் அனுமதி இருப்பதைப் பற்றி குறிப்பிடுகிறார். "பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது, நீதி ஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்க்கிறார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். மனுபுத்திரர் தாங்கள்



*Parable of the talents*

மிருகங்களைப் போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் அறியும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக் குறித்து என் உள்ளத்திலே எண்ணினேன்." (பிரசங்கி 3:16-18) சாலொமோன் யெகோவா தேவனின் நீதியையும் ஞானத்தையும் அன்பையும் புரிந்துகொண்டார். தேவனுடைய பிரமாணங்கள் மற்றும் சத்தியத்தின் கொள்கைகளை புறக்கணிப்பதன் மூலம், மனிதர்கள் வெறும் மிருகங்கள் என்பதை அவை நமக்கு நினைப்பூட்டுகிறார். மேலும், "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:28-29) நன்மை (தேவனுடைய அறிவுரைகளைப் பின்பற்றுதல்) மற்றும் தீமை (தேவனுடைய அறிவுரைகளை புறக்கணித்தல்) ஆகியவற்றின் விளைவுகளை அறியவும், புரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் மனுக்குலத்திற்கு இந்த தீமை அனுமதிக்கப்பட்டுள்ளது. தேவன் ஒவ்வொன்றையும் நிரூபிப்பார்.

அடுத்ததாக, சாலொமோன் நம்முடைய மரணத்தைப் பற்றிய நுண்ணறிவுமிக்க வசனங்களை வழங்குகிறார். "மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும், அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு. இவைகள்



*The Apostle Peter*

சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள், ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே, மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல, எல்லாம் மாயையே." (பிரசங்கி 3:19) ஆதியாகமம் , தேவன் எவ்வாறு மனிதனுக்குள் "ஜீவ சுவாசத்தை ஊதினார், மனிதன் ஜீவாத்துமாவானான் " என்பதை விவரிக்கிறது. "சுவாசம்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை "*neshamah*, "என்பதற்கு முக்கிய சுவாசம், தெய்வீக உத்வேகம், புத்திசாலித்தனம் என்று அர்த்தம். ஆத்துமா என்பதற்கான எபிரெய வார்த்தை "*nephesh* " (நெபேஷ்) இது சுவாசிக்கும் ஒரு உயிரினமாக வரையறுக்கப்படுகிறது. ஆத்துமா*nephesh* என்ற வார்த்தைக்கு, ஜீவ சுவாசம் *neshamah* உள்ள ஒரு சரீரம் என்று ஆதியாகமம் பொருள் தருகிறது.

இருப்பினும், பிரசங்கி 3:19இல், சாலொமோன் மூச்சுக்கு (ருவாச் ruach.) என்ற வேறு எபிரெய வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ருவாச் என்பது உணர்ச்சி, ஆளுமை அல்லது குணத்தின் வெளிப்பாடு என்ற பொருளில் சுவாசம் அல்லது காற்றோடு தொடர்புடையது. எனவே, ருவாச் என்பது குறிப்பாக "ஜீவ சுவாசம்" (*neshamah*) மட்டுமல்ல, ஒரு தனிப்பட்ட தனித்துவமாகவும் individual uniqueness உள்ளது. இது பெரும்பாலும் "ஆவி" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. அதன் அர்த்தத்திற்கு ஒரு உதாரணம் - ஒருவர் எரிச்சல் அல்லது கோபத்தில் மூச்சை வெளியேற்றுவதாகும். இது சிந்தை, மனது, அல்லது ஆளுமையின் புத்திசாலித்தனத்திற்கு தேவைப்படும் உணர்ச்சியை விவரிக்கிறது. ஒரு தனிநபரை தனித்துவமாக்கும் அனுபவங்களும், ஆளுமையும் அவர்களின் ருவாச் ஆகும், மேலும் இதுவே அவருடைய ஆவி என்று கருதப்படுகிறது. இது ஒரு குதிரையின் உற்சாகம் "spirited " அல்லது குழு உறுப்பினரின் "team spirit " உடையது என்று சொல்வது போன்றது. எனவே

ருவாச்சை, ஆவியுடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. மனிதனும், மிருகமும் ஒரே விதமாக மரிப்பதாகவும், அனைவருக்கும் ஒரே ஆவி அல்லது சுவாசம் (ருவாச் அல்லது ஆவி ) இருப்பதாகவும் சாலொமோன் கூறினார். அனைவரும் ஒரே மாதிரியான மரண நிலைக்குச் செல்கிறார்கள் மேலும் வேறுவிதமாக நினைப்பது வீண். இது கிறிஸ்தவ மதத்தால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. முதல் முதலில் சாத்தான் ஒரு பொய்யைச் சொல்லி, மனுஷனின் மாயையை, தனது சுயலத்திற்காக பயன் படுத்தினான், அன்றிலிருந்து "நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதியாகமம்3:4) என்பதை நிலைநிறுத்தி வருகிறான்.

மரணம் என்பது வாழ்க்கையின் முடிவு அல்லது நிறுத்தம் மேலும் அது மனுஷனையும் மிருகத்தையும் ஒரே மாதிரியாக பாதிக்கிறது. 20 மற்றும் 21 ஆம் வசனங்களில் சாலொமோன் இதைப் பற்றி மேலும் விரிவாகக் கூறுகிறார். அவர் மற்றொரு வசனத்தோடு இந்த விஷயத்தை குறிப்பிடுகிறார். "எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது, எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது" (பிரசங்கி 3:20) அவர் குறிப்பிடும் இடம் தீர்க்க தரிசனமானது, ஏனென்றால் அது நமக்கு எதிர்காலத்தில் சம்பவிக்கக்கூடியது. மரண நிலை அல்லது கல்லறையின் நிலை, மனுஷனின் முடிவாக இருக்கிறது. இந்த கருத்து சங்கீதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. "அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்." (சங்கீதம்146:4) இருந்தாலும், அது தேவனுடைய நினைவில் தக்கவைக்கப்பட்டுள்ளது.

"உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார் ? "என்று 3 :21ம் வசனத்தில் சாலொமோன் கேட்கிறார். இது நிச்சயமாக ஒரு பேச்சுத் திறன். நம்முடைய முந்தைய அனுபவங்களுடனும், தனித்தன்மை குணங் களுடனும், உயிர்த்தெழுப்பப்படுவதற்கு, தேவன் நம் ஆவியின் சாரத்தை (வாழ்க்கை) பாதுகாக்க சில வழிமுறைகள் அல்லது செயல் முறைகளைக் கொண்டிருக்க வேண்டும், மேலும் சரியான நேரத்தில் புதிதாக உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு அதை மீண்டும் இணைக்க வேண்டும். "அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்" என்று இயேசு கூறியதால், மரித்தவர்களின் அனைத்து ஆவிகளும் (ரூவாச்- தனித்தன்மை, அனுபவங்கள மற்றும் குணாதிசயங்கள்) தேவனால் பாதுகாக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட்ட இந்த நினைவகத்தை பற்றி வெளிப்படுத்துதல் 20:12இல் "புத்தகங்கள்" என்று விவரிக்கப்பட்டுள்ளது, இவைகள் பராமரிக்கப்பட்டு சரியான நேரத்தில் திறக்கப்படும்.

21ம் வசனத்தில் உள்ள கேள்விக்கு, மனுஷனுடைய ஆவி மரணத்தின் போது பரலோகத்திற்குச் செல்கிறது என்று சிலர் விளக்கலாம். இருப்பினும், இது உண்மையாக இருக்க முடியாது, ஏனெனில் "பரலோகத்திலிருந் திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை." (யோவான் 3:13)என்று இயேசு தனது முதல் வருகையில் கூறினார். அப்போஸ்த லனாகிய பேதுருவும் இந்த உண்மையைப் புரிந்து கொண்டார். "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும்..." (அப்போஸ்தலர்2:34)

மரித்தவர்கள் உடனடியாக பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று வாதிடுபவர்கள், நல்லவர்கள் மட்டுமே பரலோகத்திற்குச் செல்வார்கள் என்றும் மற்றவர்கள் அனைவரும் மரித்த பிறகு வேறு இடங்களாகிய நரகம் அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்திற்கு செல்வார்கள் என்று கூறுகிறார்கள். இந்த ஆவிகள் மரணத்திற்குப் பிறகு - மேல் நோக்கி பரலோகத்திற்கும் அல்லது கீழ்நோக்கி வேறு இடங்களுக்கு எங்காவது செல்கிறது என்று நம்பினால், "எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது" என்ற பிரசங்கி 20 :3ம் வசனம் பொய்யாகிவிடுமே. இந்த தவறான எண்ணத்திற்கு தோற்றம் தேவன் அல்ல ஏனெனில், "தேவன் குழப்பத்தை ஏற்படுத்துபவர் அல்ல" (1கொரிந்தியர்14:33) அவருடைய வார்த்தைகளை புரிந்துகொள்பவர்களுக்கு உண்மை தெளிவாகத் தெரியும்.

மரணத்தில் நாம் இல்லாமல் போய்விடுவோம் என்றும், நாம் சிறந்த மற்றும் மிகவும் பயனுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்று அறிவுறுத்தி, சாலொமோன் தனது சிந்தைகளில் உள்ளவைகளை சொல்லி முடிக்கிறார். "இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மை யில்லையென்று கண்டேன் இதுவே அவன் பங்கு தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப பண்ணுகிறவன் யார் ? " (பிரசங்கி 3:22) உண்மையில் அவரை யார் திரும்பக் கொண்டு வருவார் ? யெகோவா தேவனுடைய கிருபையினாலும், இயேசுவின் மீட்கும் பலியினாலும் அந்தக் கேள்விக்கு தேவன் பதிலளிக்கிறார். அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்ற ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை நமக்கு உள்ளது, மேலும் சிலர் ஆவியின் ஜீவிகளாக சிறந்த உயிர்த்தெழுதலை பெறுவார்கள்.

## சூரியனுக்குக் கீழே காணப்படும் தீமை

"இதற்குப் பின்பு நான் சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப்பார்த்தேன். இதோ ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை, ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலமிருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை." (பிரசங்கி 4:1) அநீதியின் வடிவில் தீமையின்

அனுமதியை கவனிக்க தன்னுடைய பார்வையை திருப்புகிறார். அப்படிப்பட்ட உலகில் வாழ்ந்த மரித்தோர்களுக்கு அதை அனுபவித்ததற்காகவும் (வசனம் 2) இன்னும் அதிகமாக, இன்னும் பிறக்காதவர்களையும் அவர் (வசனம் 3) பாராட்டுகிறார். அவருடைய வார்த்தைகளை இரண்டு வெவ்வேறு வழிகளில் விளக்கலாம் - இன்னும் பிறக்காதவர்கள் அநீதி அல்லது தீமையை அனுபவிக்காமல் இருப்பது நல்லது ஏனெனில், எதிர்காலத்தில் அநீதி குறைக்கப்படலாம் அல்லது அகற்றப்படலாம் என்று நம்புகிறார். மேலோட்டமாக, "தீமையையோ அநீதியையோ அனுபவிக்காமல் இருப்பதே" சரியான பொருளாகத் தோன்றுகிறது. இருப்பினும், அது தீமையின் அனுமதியின் நோக்கத்தை மறுக்கும். எனவே, மனித ஞானத்தை காட்டிலும், யெகோவா தேவனுடைய எல்லையற்ற ஞானம் மிக பெரிது. ஏனென்றால், அநீதியையும் தீமையையும் நேரில் அனுபவிக்காமல், மனுக்குலம் அவற்றின் விளைவுகளைப் பற்றி முழுமையாகத் அறிந்துகொள்ள முடியாது.

சாலொமோன் தன்னுடைய அனைத்து படைப்புகளையும், மற்றவர்களின் படைப்புகளையும் பிரதிபலிக்கிறார், அவற்றில் சில பொறாமை அல்லது போட்டியை ஏற்படுத்தக்கூடும் என்கிறார். பிரசங்கி 4:4இல் எல்லா வேலைகளும் மாயை என்றும் காற்றைப் பிடிக்கும் முயற்சி என்றும் அவர் முடிவு செய்கிறார். இப்படிப்பட்ட உழைப்புகள், பொறாமைப் படுவதற்காகவோ அல்லது நம் அண்டை வீட்டாரோடு போட்டியாகவோ, இவ்வளவு முயற்சிகளை செலவிடுவது முட்டாள்தனம். இது மன அழுத்தம் மற்றும் பதற்றத்தை ஏற்படுத்தும், இது சில நேரங்களில் நமது உயிர்ச்சக்தி, செல்வம் மற்றும் படைப்பாற்றலை உட்கொள்ளலாம். (வசனம் 5) இந்த முட்டாள்தனத்தை தவிர்க்க, ஒரு நல்ல ஆலோசனையுடன் முடிக்கிறார். மகத்துவம் மற்றும் புகழைத் தேடுவதை விட, சில விஷயங்களில் திருப்தி அடைவதே சிறந்தது. தேவைக்கு அதிகமாக சம்பாதிப்பதற்கு நம் வாழ்க்கையில் உழைத்து கொண்டே இருப்பது முட்டாள்தனம். (வசனம் 6) அவர் மீண்டும் அதை காற்றைப் பிடிப்பதற்கு முயற்சி செய்வதற்கு ஒப்பிடுகிறார். இது நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய உடன்படிக்கையை ஒதுக்கி வைத்துவிடும். நாம் செல்வாக்குப் பெற்ற நம்முடைய சகோதரர்கள், நம் அயலவர்கள் அல்லது நம்மைச் சுற்றியிருப்போருக்கு நாம் எவ்வாறு ஊழியம் செய்கிறோம். தாலந்துகளின் உவமையைப் போலவே, எஜமானர் தங்கள் பங்கைக் கொண்டு ஏதாவது செய்தவர்களால் மகிழ்ச்சியடைந்தார். நல்ல காரியங்களை வீண் ஆசைக்காக அல்ல, அமைதியாக செய்யவேண்டும் என்று சாலொமோன் நமக்கு நினைப்பூட்டுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகள் நமக்கு நினைவுக்கு வருகிறது, "உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதாக...

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்." (மத்தேயு 6:3,4) ஒரு கட்டுரையை வெளியிடுவது, இளைஞர் முகாமை நடத்துவது அல்லது மாநாட்டைத் திட்டமிடுவது போன்றே, சோதனைகளை அனுபவிக்கும் சகோதரர்கள் அல்லது பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு ஏற்ற காலத்தில் ஒரு வாழ்த்து மடல், அல்லது ஒரு வேளை உணவை வழங்குவது முக்கியம். உங்கள் கைகளுக்கு நேரிடுவது எதுவோ அதை சுய - மகிமைக்காக செய்யாமல், அன்போடும், பக்தியோடும் செய்யவேண்டும்.

**பயன்பாடு**

வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் ஒரு குறிப்பிட்ட காலம் இருப்பதை சாலொமோனின் கண்ணோட்டம் நமக்கு நினைப்பூட்டுகிறது. வாழ்க்கையின் இயல்பான சோதனைகள் மற்றும் இன்னல்களை நாம் அனைவரும் அனுபவிக்கிறோம். யெகோவா தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார், அது அவர் குறித்த நேரத்தில் வெளிப்படும். நம்முடைய சொந்த வாழ்க்கைக்கான அவரது திட்டமும் அவர் விரும்பியபடி பொருத்தமான காலத்தில் வெளிப்படும். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1பேதுரு4:12) நம்முடைய கல்விக்காகவும், அனுபவத்திற்காகவும் மற்றும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதற்கும் தீமையையும், சோதனையையும் தேவன் அனுமதிக்கிறார். தீமையும் அநீதியும் நம்மைச் சுற்றி இருக்கிறது. ஆனால் நாம் அவற்றில் ஒரு பகுதியாகவோ அல்லது எந்த வகையிலும் பங்களிக்கவோ முயற்சி செய்ய கூடாது.

நாம் மரிக்கும்போது, நாம் இல்லாமல் போய்விடுவோம். எனவே, நாம் நம்முடைய வாழ்க்கையை மனத்தாழ்மையுடன் வாழ வேண்டும், ஆண்டவருக்காக ஊழியம் செய்ய வேண்டும், மற்றவர்களை நேசிக்க வேண்டும், நம்மால் முடிந்த முயற்சிகளை வழங்க வேண்டும். சாலொமோனைப் போலல்லாமல், நம் ஆண்டவராகிய இயேசுவுக்கும், நம் பிதாவாகிய யெகோவா தேவனுக்கும் தாழ்மையான ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு, ஒரு சிறந்த உயிர்த்தெழுதல் நமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பதை அறிந்து அமைதியாக மரணத்தில் ஓய்வெடுப்போம். "எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும், ஆம் எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்." (சங்கீதம்90:17)

1இராஜாக்கள் 11:1-8ல் காண்பிக்கப்பட்டபடி, சாலொமோன் யெகோவா தேவனுடைய பிரமாணங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் புறக்கணிப்பதன் மூலம் அவருக்குக் கீழ்ப்படிதல் மற்றும் பயபக்தியிலிருந்து விலகிவிட்டார். அவர் யெகோவா தேவனுடைய தயவை இழந்து தன் கிரீடத்தையும் இழந்தார். நாம் ஒவ்வொருவரும் அவருடைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, நம் வாழ்வின் கிரீடத்தை இழக்காதபடி, நம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாக இருப்போம்.

### தொடர்ந்து வரும் ஒரு கருத்து
# பிரசங்கியின் பிரதிபிலிப்புகள்



"அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு, புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு." (பிரசங்கி 3:4)

***Noah Amoo***

பிரசங்கியின் புத்தகம் பிரதிபலிப்புகளின் புத்தகமாகும். எழுத்தாளர் சாலொமோன் என்று ஒப்புக் கொள்ளப்பட்டாலும், ஆசிரியர் தன்னை "பிரசங்கி" என்று அழைக்கிறார்.தேவன் அவருக்கு கொடுத்த ஞானமாகிய ஆசீர்வாதித்தின் அடிப்படையில் அவரது வாழ்க்கையின் பிரதிபலிப்புகள் அவரது தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருதுகின்றன. வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளைப் பற்றி அவர் பல கேள்விகளைக் கேட்டு, ஏழையாக இருந்தாலும் சரி, பணக்காரராக இருந்தாலும் சரி, ஒருவர் எப்படி வாழ்கிறார் என்பதில் எந்த நோக்கமும் இல்லாமல் வாழ்வது மதிப்புக்குரியது அல்ல என்று முடிக்கிறார்.

தொடர்ச்சியான கருத்து இப்படியாக துவங்குகிறது. "மாயை, மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன ?"(பிரசங்கி1:2,3) அவரது பதில் முழு புத்தகத்தின் சாரத்தையும் சுருக்கமாகக் கூறுகிறது - "காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்." (பிரசங்கி12:1314)

சாலொமோனின் பிரதிபலிப்புகள் ஏன் கருத்தில் கொள்ளத்தக்கவையாக இருந்தது ? யெகோவா தேவன் அவருக்கு நிகரற்ற ஞானத்தை அளித்தது மட்டுமல்லாமல், வாழ்க்கையின் உச்ச நிலையை அனுபவிக்கவும் அனுமதித்தார். அது அவருக்கு ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தை அளித்தது, தெய்வீக நோக்கத்துடன் இணைக்கப்படாத எந்த வாழ்க்கையும் பயனற்றது என்ற கண்ணோட்டத்திற்கு இது வழிவகுத்தது.

இராஜாவாக அவர் ஆட்சியின் தொடக்கத்தில் எல்லாம் நன்றாக இருந்தது. அவர் தனது தந்தை தாவீதின் அறிவுரைக்கு செவி சாய்த்தார் மற்றும் ஆலயம் கட்டுவது போன்ற தாவீது செய்யாத அல்லது செய்ய முடியாத பணிகளை செய்து முடித்தார். (1 இராஜாக்கள் 2:110) சாலொமோன் ஒரு இளைஞனாக தனது ஆட்சியைத் தொடங்கினாலும், ஞானத்தின் பரிசானது, அவருக்கு முன்னிருந்த




*Remember your creator*
*in the days of your youth.*

மற்றும் அவருக்குப் பின் வரவிருக்கும் எந்தவொரு ஆட்சியைக் காட்டிலும் ஆசீர்வாதமாக இருந்தது. (1இராஜாக்கள் 3:12) ஞானம், பொருளாதார வலிமை மற்றும் மத அனுசரிப்பு ஆகியவை அவரது ஆரம்ப ஆண்டுகளில் சிறப்பியல்பாக இருந்தது. எந்த இராஜாவும் இஸ்ரயேலைத் தாக்கத் துணியவில்லை. இருப்பினும் சாலொமோன் பலவீனத்தை வெளிப்படுத்தினார். அவர் தன் இருதயத்தை யெகோவா தேவனுடைய பிரமாணங்களில் இருந்து விலக்கினார். அவருடைய வாழ்க்கை வெறுமையானது . இந்த வெறுமையை யெகோவா தேவனுக்கு கீழ்ப்படிவதன் மூலம் மட்டுமே நிரப்ப முடியும் என்பதை அவர் இறுதியாக உணர்ந்தார். விசுவாச வீரர்களில் பட்டியலிடப்படாவிட்டாலும், சாலொமோனின் முன்மாதிரி நமக்கு நன்மை யளிக்கிறது. (எபிரெயர்11:34)

## ஒரு பிரசங்கியா?

ஒரு பிரசங்கியாக இருப்பது (எபிரெய வார்த்தையில் கோஹெலெட் *Qohelet*) பார்வையாளர்களைக் குறிக்கும். அவருடைய வார்த்தைகள் பெரும்பாலும் வாலிபர்களை நோக்கியே இருக்கும். "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே." (பிரசங்கி11:9,10)மேலும், "நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்கு



*James, Jude, and others, learning from Jesus*

நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமான வைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், "(பிரசங்கி12:1) என்றும் எழுதுகிறார். (நீதிமொழிகள் 1:14காண்க)

வாழ்க்கையில் அர்த்தத்தைத் தேடும் ஒரு வாலிபனுக்கு பிரசங்கி புத்தகத்தை வாசிப்பது பயனுள்ளதாக இருக்கும், ஆனால் மிகவும் முதிர்ந்தவர்களுக்கும் பயனளிக்கும். (2நாளாகமம்1:1112, 2தீமோத்தேயு3:16) வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளை கையாள்வதில் சாலொமோனின் அனுபவம் அவரது வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது மற்றும் தேவனுடனான வாழ்க்கையின் நன்மைகள் மற்றும் அவர் இல்லாத வாழ்க்கையின் வெறுமை பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. இதற்கு பின் பவுல் இவ்வாறு எழுதினார், "...நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிப்பது...." ஒரு மனிதன் கவனிக்க தகுந்தது. (எபிரெயர்5:14, பிரசங்கி1:17, 13)



*Haggai, a prophet when Israel was completing the temple after Israel's return from Babylon*

### எல்லாவற்றுக்கும் ஒரு காலம் உண்டு

மூன்றாம் அதிகாரம் ஒரு பிரபலமான பாடலின் மூலம் எங்கும் பரவிய முரண்பாடுகளின் வரிசையைக் கொண்டுள்ளது. 1950 களின் நாட்டுப்புற பாடகர் பீட் சீகர் எழுதிய "திருப்பு, திருப்பு, திருப்பு" எழுதியத்தில் - நடவு மற்றும் அறுவடை, துக்கம் மற்றும் மகிழ்ச்சி, அமைதி மற்றும் போர், சேமிப்பு மற்றும் செலவு, அமைதி மற்றும் கர்வம், தவறுகள் மற்றும் திருத்தங்கள், வாழ்க்கை மற்றும் இறப்பு பற்றியது.

இந்த முரண்பாடுகள் நேரத்தின் முக்கியத்துவத்தையும், அதை ஞானமாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் நமக்கு உணர்த்துகின்றது. பூமியையும் அதில் இருப்பிடத்தையும் உருவாக்க தேவன் காலத்தை எடுத்துக்கொண்டார். அந்த சிருஷ்டிப்பின் ஒவ்வொரு பகுதியும் இணக்கமாக செயல்படுவதை உறுதிசெய்ய அவர் நேரத்தை எடுத்துக் கொண்டார். இருப்பினும், அந்த சிருஷ்டிப்பில் வாழ்பவர்களுக்கு அது அதிகபட்ச நன்மையை ஏற்படுத்துவதால், சிருஷ்டிப்பின் நோக்கத்தை தீமையால் குறுக்கிட அவர் அனுமதித்தார். ஆனால் அது தற்செயலாக நடக்கவில்லை. அவருடைய முன்னறிவை நாம் புரிந்துகொள்ளவும், முழு திட்டத்தையும் அவருடைய கண்ணோட்டத்தில் பார்க்கவும் அவர் கால தீர்க்கதரிசனத்தை வழங்கினார். (தானியேல் 9:2427)

அந்தத் திட்டத்தில் தேவன் ஒரு சபை வகுப்பாரை அழைத்து, அவர்களுக்கான வளர்ச்சிக்கான நேரத்தைப் பங்கிட்டார். இறுதியில் அவர்கள் பரலோகத்தில் அவருடன் ஒரு குடும்பமாக சேருவார்கள். இவர்களில் ஒவ்வொரு நபருக்கும் அவர்களின் அழைப்புக்கு பதிலளிக்கும் காலத்தையும், அவருடைய வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கான காலத்தையும், உடன் படிக்கைக்கான செலவைக் கணக்கிடுவதற்கான நேரத்தையும், விசுவாசமாக நிரூபிக்க நேரத்தையும் தருகிறார். (லூக்கா14:28) இந்த வாழ்க்கையில் ஒருவர் குறுகிய அல்லது நீண்ட நடைப்பயணத்தை அனுபவித்தாலும், தேவையான குணாதிசயங்களை வளர்த்துக் கொள்ள தேவன் அவர்களுக்கு நேரம் கொடுக்கிறார். எனவே, "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல்,

ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவை களானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்."(எபேசியர்5:15,16) என்று பவுல் கூறுவதில் ஆச்சரியமில்லை. பந்தயத்தை விடாமுயற்சியுடன் ஓடுவோம், நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்ய ஆர்வத்துடன் பாடுபடுவோம். "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும் நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது." (ரோமர்13:11)

நாம் சந்திப்பதில் கவலை என்பது, நேரத்தை வீணடிப்பதில் மிகப் பெரிய ஒன்றாகும். (லூக்கா 12:2531) சிரமங்களின் போது நாம் நமது முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும். "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக்கோபு 1:4) என்று யாக்கோபு நமக்கு அறிவுறுத்துகிறார். பொறுமையோடு சகிப்புத்தன்மையை வளர்த்து கொள்ளும்போது, ஆவியின் பலனை வளர்த்துக்கொள்வது மட்டுமல்லாமல், நமது பூமிக்குரிய பயணத்திலிருந்து மன அழுத்தத்தை அகற்றவும் கற்றுக்கொள்கிறோம் - "வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதா யிருக்கிறது."(லூக்கா 8:15,10:36) பயிர்கள் முதிர்வதற்குள் அறுவடை செய்யக்கூடாது என்பது விவசாயிகளுக்கு தெரியும். அதேபோல, நாம் உடனடியாக நம்முடைய ஆண்டவரின் சாயலாக மாறமுடியாது. நீதியின் கனியை நாம் பொறுமையாக வளர்த்துக் கொள்ளவேண்டும். சில சமயங்களில், ஒரு சோதனை முடிந்துவிடுவதற்கு அல்லது நிறைவேற்றப்பட்டதாகக் கூறிய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு நாம் மிகவும் ஆர்வமாக இருப்போம். ஆனால், "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்." (2பேதுரு 3:9) இதற்கான ஒரு நல்ல அறிவுரையை பவுல் கூறுகிறார். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து? வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." (எபிரெயர்10: 36)

தேவன் உடல் ரீதியாக ஓய்வெடுக்க தேவையில்லை. (சங்கீதம்121:4, யோவான்5:17) ஆனாலும் அவர் ஓய்வு நாட்களிலும் யூபிலிகளிலும் இஸ்ரயேலருக்கு ஓய்வு காலங்களை வழங்கினார். உடன்படிக்கை செய்தவர்களுக்கு, விசுவாசத்தின் மூலம் ஓய்வு கிடைக்கிறது. விசுவாசத்தினால் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நாம் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளோம், இதை இஸ்ரயேலில் பலர் பெறத் தவறிய ஒன்றாகும். (எபிரெயர்4:11, 3:19,12) விசுவாசத்திலும் தேவனுடைய வாக்குத்தத் தங்களிலும் பொறுமையாக இளைப்பாறுவோம், சகித்திருப்பவர்களுக்கு வரும் இளைப்பாறு தலுக்காகக் காத்திருப்போம்.

"அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார், உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார், ஆதலால் தேவன் ஆதி முதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" (பிரசங்கி 3:11) தேவனால் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளின் கீழ்

இஸ்ரயேல் வளமாக இருந்தது, ஆனால் மற்ற நாடுகளைப் போல இருக்க அவர்கள் ஒரு இராஜா வேண்டும் என்று கேட்டார்கள். ஒரு ஞானமான பழமொழி உள்ளது - "நீங்கள் கேட்பதை குறித்து கவனமாக இருங்கள், ஏனென்றால் நீங்கள் அதைப் பெறலாம்." இஸ்ரயேலர் தங்கள் தவறான விருப்பத்தைக் கண்டுபிடிக்க தேவன் அனுமதித்தார். இராஜ்யம் பிரிக்கப்படும் வரை நல்ல மற்றும் கெட்ட இராஜாக்கள் இருவரும் முன் வந்தனர்.

இயேசு தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, உயிர்த்தெழுந்த மனுக்குலம் பாவம் மற்றும் தீமையின் பிணைப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, உண்மையான ஞானமும் கருணையும் கொண்ட ஆட்சியாளரின் நன்மைகளை அனுபவிப்பார். சாலொமோனைவிட மேலான ஞானத்தோடு நியாயந்தீர்ப்பார். (லூக்கா11:31) விழுந்துபோன மனுக்குலம், நீதியைக் கற்க வேண்டிய முதல் உண்மையான வாய்ப்பாக இது இருக்கும். (வெளிப்படுத்துதல்20:12, ஏசாயா26:9)

## அநீதி மறைந்துவிடும்

சாலொமோன் அநீதியைப் பற்றி ஒரு புலம்பல் எழுதினார். (பிரசங்கி 4:1) நாம் அடிக்கடி பெரும்பாலானவர்களின் மேல் அநீதியை கவனிக்கிறோம். இது இந்த உலகத்தையும் பொதுவான ஜனங்களையும் இழிவாக எண்ண காரணமாகிவிடலாம். அது ஆபத்தானது. ஒரு நல்ல ஆட்சியாளரின் தேவையைப் புரிந்துகொள்ள தேவனுடைய திட்டம் நமக்கு உதவுகிறது. தேவன் நியாயமற்ற எந்த ஒரு சிருஷ்டிப்பையும் வடிவமைக்க வில்லை. (ஆதியாகமம்1:28) எவ்வாறாயினும், நம்முடைய முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமை மற்றும் பாவத்தின் அறிமுகம் ஆகியவற்றால், நம் உலகம் தேவனுடைய நோக்கத்திலிருந்து தொலைவில் சென்றது. சாலொமோன் தனது நாளின் நிலைமைகள் இப்படியாக இருந்தபோதிலும் மனுக்குலத்தின் நெகிழ்ச்சியைப் பாராட்டுகிறார். நாமும் அவ்வாறே செய்வோம் - நாம் எதைப் பார்த்தாலும், கேட்டாலும் உலகில் பல நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். இன்று நாம் இராஜ்யத்தின் கொள்கைகளை பிரதி நிதித்துவப்படுத்துவோம். (வசனம் 46) இன்று உலகம் எப்படி இருக்கிறது என்று நாம் பார்க்காமல், 1000 ஆண்டு ஆட்சியின் நிறைவில் அது எப்படி இருக்கும் என்று பார்க்கலாம். அனைத்து சமூக அநீதிகளும் ஒழிக்கப்படும். ஒடுக்குபவர்கள் (மலைகள்) தாழ்த்தப்படுவார்கள், ஒடுக்கப்பட்டவர்கள் (பள்ளத்தாக்குகள்) உயர்த்தப்படும். (ஏசாயா40:4, ஆகாய்2:7) "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும் வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை, ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப் போல என் ஜனத்தின் நாட்களிருக்கும், நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்." (ஏசாயா 65:21, 22)

நம்முடைய நேரத்தை தேவனுடைய பார்வையில் ஏற்றுக் கொள்ளும்படி பயன்படுத்த நம்முடைய வைராக்கியமும் விசுவாசமும் பலப்படுத்தப்படட்டும். இயேசுவோடு இன்னும் நெருக்கமாக நடக்கவும், தேவனுடைய சித்தத்தை நம் வாழ்வில் பின்பற்றவும் பிரசங்கியின் வார்த்தைகள் நமக்கு உதவட்டும்.

### பொருட்களுக்கு மேலான உறவுகள்
# ஞானமான ஆலோசனை



Ken Allison

"பின்பு நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்குக் கீழே மாயையான வேறொரு காரியத்தைக் கண்டேன்." (பிரசங்கி 4:7)

"சூரியனுக்குக் கீழே" என்ற சொற்றொடர் சுமார் 29 முறை பிரசங்கி புத்தகத்தில் மட்டுமே காணப்படுகிறது. சாலொமோன் பூமிக்குரிய வாழ்க்கையை குறிப்பாக யெகோவா தேவனின் வழிகாட்டுதல் அல்லது அவரை மதிக்காமல் இருக்கும் வாழ்க்கையை விவரிக்க இந்த சொற்றொடரைப் பயன்படுத்துகிறார். அவர் சுய (உலக) இன்பத்தை பார்த்து, அனுபவித்தார், அது அவரை விரக்தியையும் திருப்தியடையாத விரக்திக்குள் கொண்டு சென்றது. தேவனுடைய சிருஷ்டிப்பின் அழகைப் போற்றவும், அவரது இருப்பை உணர்வதும் மட்டுமே உண்மையான திருப்தியைத் தருகிறது என்பதை அவர் இறுதியில் கண்டார். பிரசங்கியின் இந்த பகுதியில் நமக்கான செய்தி என்னவென்றால், நம்முடைய உறவுகளை விட பொருட்களுக்கு மேலாக மதிப்பிடுவதும், உடைமைகளும், இன்பங்களும் நிலையற்றவை என்பதைக் காண்பதும் ஆகும். இதுவே வாழ்க்கையில் மகிழச்சிக்கான திறவுகோல்.

"ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான், அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும் சகோதரனுமில்லை, அப்படியிருந்தும் அவன்படும் பிரயாசத்துக்கு முடிவில்லை. அவன் கண் ஐசுவரியத்தால் திருப்தியாகிறதுமில்லை, நான் ஒரு நன்மையையும் அநுபவியாமல் யாருக்காகப் பிரயாசப்படுகிறேன் என்று அவன் சிந்திக்கிறது மில்லை, இதுவும் மாயை, தீராத தொல்லை. ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம், அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான், ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே..." (பிரசங்கி 4:811) ஒன்றை விட இரண்டு ஏன் சிறந்தது ? ஏனென்றால் நெருங்கிய நண்பர்களைப் பெறுவதில் உள்ளார்ந்த வெகுமதி



*Rahab, ancestress of Jesus, hiding the spies*

உள்ளது. நாம் சரீர ரீதியாகவும், மனரீதியாகவும் ஒருவரையொருவர் தூக்கிவிட முடியும். கடினமான காலங்களில், உங்களை ஊக்குவிக்க யாராவது உங்களுடன் இருப்பது மிகவும் நல்லது. தோல்வியின் தருணங்களில், வலியைக் கடந்து செல்லவும், குணமடைய உதவவும் நம் அருகில் மற்றொரு நபர் இருப்பது மிகவும் நல்லது.

இந்தியாவின் நெரிசல் மிகுந்த நகரங்களில் ஒன்றான பரபரப்பான தெருவில், போக்குவரத்து நிறுத்தப்பட்டது. குறுகலான சாலையில் ஒரு பெரிய மரம் விழுந்தது. ஒரு சிறுவன் பஸ் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினான். தோளில் முதுகுப் பையுடன், அகற்ற முடியாத அந்த தடையை ஆய்வு செய்வதற்கு அவன் மரத்தண்டைக்கு வந்தான். சிறுவன் தன் முதுகுப் பையை இறக்கி வைத்து, தனது முழு உடல் எடையையும் மரத்தடியில் எந்த பயனுமில்லாமல் சாய்த்துக்கொண்டான். இன்னும் சில சிறுவர்கள் இணைந்தார்கள். ஆனால் அவர்களால் இன்னும் அந்த பெரிய தடையை அசைக்க முடியவில்லை. பெரியவர்களும் ஒவ்வொருவராக சேர ஆரம்பித்தனர். விரைவில், பருவமழையில் நனைந்த குடிமக்களின் இராணுவம் மரத்தை எதிராகத் தள்ளியது. இறுதியாக, பெரும்பாலான ஜனங்கள் ஒன்று சேர்ந்து அந்த சாலையில் விழுந்திருந்த மரத்தை ஓரமாக அகற்றினார்கள். வாகனங்கள் மீண்டும் நகர்ந்தது. நம்முடைய பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் பெரிய மரங்களை நாம் சந்தித்தாலும், அவை மற்றவர்களிடமிருந்து உதவியை நாம் நாடினால் மட்டுமே அவைகளை அகற்ற முடியும்.



**Moses, humbled at the burning bush, removed his shoes.**

12 ம் வசனத்தின் ஆழமான கூற்றை வாசிக்கலாம் - "ஒருவனை யாதுமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம், முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது." தோழமையின் அதிகமான மதிப்பை ஒரு கயிற்றின் விளக்கம் காட்டுகிறது. முந்தைய கதை விளக்குவது போல, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணையும் போது எளிதில் பிரிக்கப்பட மாட்டார்கள். "கயிறு"(cord) என்பதற்கான எபிரெய வார்த்தை கஹூட் (*khoot*)ஸ்டிராங்க்ஸ் H2339. இதே வார்த்தை யோசுவா 2:17 ல் "நூல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி - இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும் போது, நீ இந்த சிவப்புநூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி, உன் தகப்பனையும் உன் தாயையும் உன் சகோதரர்களையும் உன் தகப்பன் குடும்பத்தார்

அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்கொள் .."சிவப்பு நூல் அல்லது கயிறு, ராகாப்பின் விசுவாசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. இதே விசுவாசம் ராகாப்பையும் அவளுடைய முழு குடும்பத்தையும் காப்பாற்றியது.

வேதாகமம் முழுவதிலும், சிவப்பு நூல் மீட்கும் பொருளின் சித்திரமாக "நெய்யப்பட்டுள்ளது." நம்மையும் ஆவிக்குரிய ரீதியில் இந்த மீட்கும் பொருளே பிணைக்கிறது. இது இல்லாமல் நாம் யாரும் உதவிக்காக தேவனை அணுக முடியாத. இதை நம்முடைய நம்பிக்கையின் அடிப்படையாகக் கொண்டு, ஆவிக்குரிய வெற்றியின் இலக்கை அடைய எல்லா அனுபவங்களும் ஒன்றிணைந்து செயல்படும் என்று பவுல் நமக்கு உறுதியளிக்கிறார். தேவனை நம்பி, இயேசு கொடுத்த நீதியின் வஸ்திரத்தை அணிந்தவர்கள் ஆவிக்குரிய ஓட்டத்தில் இருந்து தோற்கடிக்கப்பட மாட்டார்கள். (ரோமர்8:28)



*Charles Spurgeon*

**மதிப்புமிக்க ஞானம்**

"இனி ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய இராஜாவைப்பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி." (பிரசங்கி 4:13)சாலொமோன் இளமையாக இருந்தபோது, அவருடைய இருதயம் ஞானத்திற்காக ஏங்கியது. பிந்தைய ஆண்டுகளில், அவர் தனது ஆரம்பகால ஆட்சியின் ஒரு பகுதியாக இருந்த திருப்தியை இழந்துவிட்டதை அவர் கண்டார். "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 18:3) சாலொமோன் அனுபவித்த இழப்பு அவரை ஆட்டிப்படைத்தது. "அரசாளச் சிறைச்சாலையிலிருந்து புறப்படுவாருமுண்டு, இராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவாருமுண்டு. சூரியனுக்குக் கீழே ஜீவனுள்ளோர் யாவரும் இராஜாவின் பட்டத்திற்கு வரப்போகிற பிள்ளையின் பட்சத்தில் சார்ந்திருப்பதைக் கண்டேன். அவர்களுக்கு முன் அப்படிச் செய்த ஜனங்களின் இலக்கத்திற்கு முடிவில்லை, இனி இருப்பவர்கள் இவன் மேலும் பிரியம் வைக்காமற்போவார்கள், இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது." (பிரசங்கி4:14-16)

சாலொமோன் அரியணை ஏறியதும், அவர் தேவனைத் தேடினார், மேலும் அவர் விரும்பியதைக் கேட்க தேவன் அவருக்கு வாய்ப்பளித்தார். சாலொமோன் தன் இயலாமையைத் தாழ்மையுடன் உணர்ந்து, தேவனுடைய ஜனங்களை நீதியாகவும்,


மேன்மையாகவும் ஆளுவதற்குத் தேவையான ஞானத்தை தேவனிடம் கேட்டார். தேவன் அவருக்கு ஞானத்தையும் செல்வத்தையும் கொடுத்தார். (1இராஜாக்கள்3:415) இளைஞனாக இருந்தபோது மேலிருந்து நிறைவான ஞானத்தை தாழ்மையாக பெற்ற தன் நினைவுகளிலிருந்து தப்ப முடியாது என்பதை இப்போது அவர் உணர்ந்தான். (யாக்கோபு 3:17)

வளர்ந்தவராக அவர் பின் தொடர்ந்த சுய இன்பம் மற்றும் சிற்றின்பங்கள் ஆகியவற்றிற்கு எந்த அர்த்தமும் இல்லை.

**அதிகாரம் 5**

"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள், மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு, தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக." (பிரசங்கி 5:1, 2) இந்த வசனங்களில் உள்ள "தேவன்" என்பதற்கான எபிரெய வார்த்தை எலோஹிம் ஆகும். (Strong's H430) எலோஹிம் என்பதற்கு "வல்லமையுள்ள" என்று பொருள்.

இது ஒரே உண்மையான தேவனுக்கு மட்டுமல்ல, மனித ஆட்சியாளர்கள், நீதிபதிகள் மற்றும் தேவதூதர்களைக் குறிக்கவும் பயன்படுத்தப் படுகிறது. தேவன் எரியும் புதரில் மோசேக்கு தம் பெயரை வெளிப்படுத்திய பிறகும் (யாத்திராகமம் 3:14), தேவனுடைய வல்லமையையும் சக்தியையும் வலியுறுத்துவதற்காக எலோஹிம் என்ற சொல்



*Matthew being called by Jesus to follow him*



*Solomon, writing reflectively*

தோன்றுகிறது. மோசே நின்ற பூமி பரிசுத்தமாக இருந்ததால் ஆண்டவர் அவரது காலணிகளைக் கழற்றச் சொன்னார். இந்தியாவில் இருந்து வரும் மூப்பர்கள் சொற்பொழிவாற்றுவதற்கு முன் தங்கள் காலணிகளைக் கழற்றுகிறார்கள்.

நம்முடைய அர்ப்பணித்தப் பிறகு நாம் யெகோவா தேவனுடன் தனிப்பட்ட உறவுக்குள் வந்தாலும் (யாக்கோபு 4:8) யெகோவா தேவனின் வல்லமை மற்றும் அதிகாரத்திற்காக பயபக்தியுடன் அவரை அணுக வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வெண்டும். அவர் இப்பிரபஞ்சத்தின் சர்வவல்லமை யுள்ளவராக இருக்கிறார்.

"தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறது போல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும். நீ தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே, அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்து கொண்டதைச் செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற் போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம். உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே, அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன் சொல்லாதே, தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வாாத்தைகளும் வியர்த்தமாயிருக்கும், ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு." (பிரசங்கி 5:3-7)

சரியான பயபக்தியும் கற்றலும் தேவனைச் சேவிப்பதற்கும், அவருக்கு எப்படிச் சிறந்த முறையில் சேவை செய்யலாம் என்பதைக் கற்றுக் கொள்வதற்கும் ஒரு விருப்பத்தை உருவாக்கும். (எரேமியா 29:11) "உன் காதில் இருக்கும் பஞ்சியை எடுத்து வாயில் போடு" என்று ஒரு புத்திமதி சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய அர்ப்பணிப்புக்கு ஜெபம், சிந்தனை மற்றும் முழுமையான பரிசீலனை தேவை.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரனையும் சகோதரி களையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்தால்... அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ?" (லூக்கா14:2630)

நம்முடைய அர்ப்பணிப்பு மரணம் வரையிலான ஒரு பலி. இது நம்முடைய குணாதிசயங்களை உறுதிப்படுத்தும் பரிசுகளையும், அனுபவங்களையும் உள்ளடக்கியது. பின்வாங்கி போகுபவர்களிடம் தேவன் மகிழ்ச்சியடைவதில்லை. அந்த வாக்குறுதியை செயலில் நிறைவேற்றாததைவிட தேவனுக்காக ஏதாவது செய்வதற்கு வாக்குறுதி அளிக்காமல் இருப்பது நல்லது என்பதை சாலொமோன் அறிந்திருந்தார். பொருத்தனை செய்யாமல் இருப்பது நல்லது. (எண்ணாகமம்30:24) உன்னதமான கவனச்சிதறல்கள் கூட நாம் விரும்பிய போக்கிலிருந்து நம்மை அழைத்துச் செல்லும். கிறிஸ்துவின் காரணத்திற்காக நாம் அர்ப்பணிக்கும்போது முன்னுரிமைகள் மாற வேண்டும். நம்முடைய அர்ப்பணிப்பில் இருந்து நம்மை திசைத்திருப்பும் இரண்டு காரியங்களை பற்றி 8 -17 வசனங்கள் விவாதிக்கிறது.

- உலகில் நாம் காணும் அநீதிகள்
- செல்வத்தின் ஈர்ப்பு

சாலொமோனின் தந்தை தாவீது, பல சங்கீதங்களில் அநீதியைப் பற்றி எழுதினார், அதில் 94ம் சங்கீதம் மிகவும் முக்கியமான நிகழ்வுகில் ஒன்றாகும். "நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே பிரகாசியும். " (வசனம் 1) *el neqamot* என்ற தேவனுடைய இந்த குணாதிசயம் எபிரெய மொழியில் உள்ளது. மேலும் இது இந்த சங்கீதத்தில் மட்டுமே நிகழ்கிறது. பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் அதை "பழிவாங்கும் தேவன்" என்று குறிப்பிடுகிறது. உலகில் நடக்கும் அநீதியின் ஆதிக்கத்தைக் கண்டு தாவீது இங்கு ஆத்திரம் அடைந்து, தீமை செய்பவர்களுக்கு எதிராக கடுமையாக பழிவாங்கும் பொருட்டு, ஒரு அற்புதமான தோற்றத்தை வெளிப்படுத்த, "பிரகாசியும்" என்று யெகோவா தேவனை அறிவுறுத்துகிறார். மேலும், "கர்த்தாவே, துன்மார்க்கர் எது வரைக்கும் மகிழ்ந்து, துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்? " என்று 3ம் வசனத்தில் தாவீது தொடருகிறார். இந்த வேதனையான அழுகையைப் பற்றி சார்லஸ் ஸ்பர்ஜன் இப்படியாக குறிப்பிட்டார் - "இந்த கசப்பான புகார் பல முறை விசாரணையின் நிலவறைகளிலும், அடிமைத்தனத்தின் சாட்டையடி இடுக்கைகளிலும், அடக்குமுறையின் சிறைகளிலும் கேட்கப்பட்டது. சரியான நேரத்தில் தேவன் தனது பதிலை வெளியிடுவார். ஆனால் அதன் முழுமையான முடிவு இன்னும் வரவில்லை."

இந்தஅறுவடையின் முடிவு காலத்தில் நாம் மிகவும் மதிக்கும் கோட்பாடுகளில் ஒன்று தீமையின் அனுமதி. எனவே நல்லவர்களுக்கு ஏன் கெட்ட விஷயங்கள் நிகழ்கின்றன என்று கேள்விகள் கேட்கப்பட்டால், இது மட்டுமே திருப்திகரமான பதிலாகும். "யுகங்களின் தெய்வீக திட்டத்திலிருந்து இந்த காரணத்தைக் கவனிக்கலாம் - "பாவத்தின் நுழைவைத் தேவன் தடுத்திருக்க முடியும், ஆனால் அவர் அதைச் செய்யவில்லை என்பதற்கான போதுமான சான்றாக, தற்போதைய தீமையின் அனுமதியானது.... இறுதியில் சில பெரிய நன்மைகளைச் செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அதன் விளைவுகளிலிருந்து மனிதனை விடுவிப்பதற்கான பரிகாரம் அளிக்கப்பட்டதால், அதன் விளைவு, தீமைக்கு எதிரான

நல்லொழுக்கத்தின் நிகரற்ற புத்திசாலித்தனத்தை முழுமையாகப் பாராட்டுவதற்கு, இந்த அனுபவத்தில் மனுஷனை இட்டுச் செல்வதை அவர் கண்டார்.... மீட்பின் மாபெரும் திட்டம் மற்றும் அதன் விளைவாக எல்லாவற்றையும் மீட்டெடுப்பதன் மூலம், கிறிஸ்துவின் மூலம் வரும் ஆசீர்வாதங்கள் தீமையின் அனுமதியின் மூலம் விளைகின்றன என்பதை நாம் காணலாம், இந்த அனுமதி இல்லையெனில், இரட்சிப்பை முழுமையாக உணர்ந்திருக்க முடியாது." (pages 117135)

உலகின் தவறுகளை சரிசெய்வதற்காக பல உன்னதமான ஜனங்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர், ஆனால் அதை ஒருபோதும் வெகு ஜன அளவில் செய்ய முடியாது. இருப்பினும், அர்ப்பணிக்கப்பட்ட நாம் அநீதிக்கு ஆளாகும் நபர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. பவுல் அறிவுறுத்துவது போல், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." (கலாத்தியர் 6:10) இந்த உலகின் இரண்டாவது கவனச்சிதறல் - செல்வத்தைப் பெறவும் அதை தக்கவைத்திருக்கவும் உள்ள ஆசை. "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." (மத்தேயு 6:1921)

இன்று நம்முடைய உலகம் வெற்றியின் கலாச்சாரத்தை பறைசாற்றுகிறது. பொருள் செல்வம் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது என்ற நம்பிக்கை உள்ளது. வங்கிக் கணக்கின் அளவு, ஒருவரின் வீட்டின் சதுர அடிகள் அல்லது ஒருவரின் கேரேஜில் உள்ள கார்களின் தயாரிப்பு ஆகியவற்றைக் கொண்டு வாழ்க்கையின் மதிப்பு அளவிடப்படுவதாக நம்பப்படுகிறது. "ஒருவருக்குத் தேவையான அல்லது தகுதியானதை விட, குறிப்பாக பொருள் செல்வத்தை அதிகமாகப் பெற்ற அல்லது வைத்திருப்பதற்கான அதிகப்படியாக ஆசை." என்று அமெரிக்கன் ஹெரிடேஜ் அகராதி பேராசையை இவ்வாறு வரையறுக்கிறது. செழுமை ஒரு வழிமுறையாக அல்ல ஒரு முடிவாக பார்க்கப்படுகிறது. செல்வம் என்பது ஒரு நீர்த்தேக்கமாகப் பயன்படுத்தப்பட வேண்டும், ஒரு நதியாக அல்ல. ஒருவரின் தனிப்பட்ட சாம்ராஜ்யத்திற்கு உணவளிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது.

நம்முடைய பொருள்கள் தேவனுக்கு சொந்தமானவை, பூமியில் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவை பயன்படுத்தப்பட வேண்டும். நம்முடைய பொக்கிஷம் வங்கியில் இருந்தால், நம் இருதயம் உகேலா வங்கி பெட்டகத்தைப் போல இருட்டாகவும் குளிராகவும் இருக்கும். நம்முடைய பொக்கிஷம் பரலோகத்தில் இருந்தால், நம்முடைய இருதயம் மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் மனநிறைவால் நிரம்பி வழியும்.

இவைகளை பணத்தால் வாங்க முடியாது. "இதோ உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே இவன் பங்கு." தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும் தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம். (பிரசங்கி 5:1820)

கர்த்தருடைய நீரூற்றின் ஆழத்தில் இருந்து உண்ணவும் பருகவும் அவருடைய திராட்சைத் தோட்டத்தில் பணிச் செய்வதே சபையின் வேலையாக உள்ளது. இதை ஒருவர் செய்யும் போது, தேவன் இந்த முயற்சிக்கு மகிழ்ச்சியுடன் பதிலளிப்பார். நம்முடைய தற்போதைய மகிழ்ச்சி நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையை மேம்படுத்துகிறது மற்றும் தொடர்ந்து வரும் மகிழ்ச்சிகளை பெருக்குகிறது. துக்கமும் வலியும் இறுதியில் மறந்துபோகும். ஆனால் வசனங்கள் சொல்லுகிறபடி, "தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." (1கொரிந்தியர் 2:9)

## நற்பெயரின் மதிப்பு

"பரிமளதைலத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியும், ஒருவனுடைய ஜநந நாளைப் பார்க்கிலும் மரணநாளும் நல்லது. விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம் இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும். உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான். நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம், முக துக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும், மூடரின் இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும். ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம். மூடனின் நகைப்பு பானையின் கீழ் எரிகிற முள்ளுகளின் படபடப்பைப் போலிருக்கும், இதுவும் மாயையே. இடுக்கணானது ஞானியையும் பைத்தியக் காரனாக்கும், பரிதானம் இருதயத்தைக் கெடுக்கும். ஒரு காரியத்தின் துவக்கத்தைப்பார்க்கிலும் அதின் முடிவு நல்லது. பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்." (பிரசங்கி 7:18)

"திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது, பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்" (நீதிமொழிகள்22:1) என்று சாலொமோன் ஞானி எழுதுகிறார். நல்ல பெயர் பெறுவது என்பது மற்றவர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் வாழ்வதாகும். ஜனங்கள் சார்ந்திருக்கக்கூடிய ஒருமைப்பாட்டைக் காட்டுவதாகும். ஒரு நல்ல பெயரைப் பேணுவது என்பது நாம் ஒரு போதும் தவறுவதில்லை என்று அர்த்தமல்ல ஆனால் நாம் தவறு செய்தால், விஷயங்களைச் சரியாகச் செய்ய நம்மால் முடிந்ததைச் செய்யலாம்.

நம்முடைய வாழ்க்கை முழு நேர்மையுடன் இருக்கவேண்டும். "ஒருமைப்பாடு" என்ற சொல் ஒரு கணிதச் சொல்லிலிருந்து வந்தது, இதற்கு "ஒன்று" அல்லது "ஒரு முழு எண்" என்று பொருள். நம்முடைய ஆவிக்குரிய அர்ப்பணிப்புக்கும் நம்முடைய பூமிக்குரிய நடைமுறைகளுக்கும் இடையில் எந்தப் பிரிவும் (வித்தியாசங்கள்) இருக்கக்கூடாது. நாம் யெகோவா தேவனிடம் வாக்களித்தது போல ஒருவருக்கு ஒரு வாக்குறுதியை அளிக்கும் போதும், நம்முடைய சூழ்நிலைகள் மாறினாலும், அதைக் கடைப்பிடிக்கவேண்டும். மற்றவர்கள் நம்மைச் சார்ந்திருக்கும் போது, நாம் நம் வாழ்க்கையை உயர்ந்த முறையில் நடத்துவதை அவர்கள் பார்ப்பார்கள். (1பேதுரு3:1012, 2கொரிந்தியர்8:21)

சாலொமோன் நடத்தையை சரிசெய்வதற்கு ஒரு கண்டனத்தின் மதிப்பையும் பரிந்துரைக்கிறார். கண்டனங்கள் எப்போதாவது இனிமையானவையாக இருக்குமா ? இருப்பினும், அவை நமக்கு ஞானத்தைக் கற்பிக்கின்றது. (எபிரெயர் 12:11) "உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே, மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்."(பிரசங்கி 7:9) கோபத்தின் எதிர்வினை சமாதானத்தை உருவாக்கும் ஆவிக்கு எதிராகச் செல்லும் மேலும் அது முட்டாள்தனம் என்று நிரூபிக்கப்படலாம். "இந்நாட்களைப் பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே, நீ இதைக் குறித்துக் கேட்பது ஞானமல்ல. சுதந்தரத்தோடே ஞானம் நல்லது, சூரியனைக் காண்கிறவர்களுக்கு இதினாலே பிரயோஜனமுண்டு" (பிரசங்கி 7:911) "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை." (வசனம் 20)

விசுவாசம் என்பது வேறுப்பட்ட கடந்த காலத்திற்கான அனைத்து நம்பிக்கையையும் விட்டுவிடுவதாகும். (பிலிப்பியர் 3:14,15) நம்மைப் பற்றிய சரியான கண்ணோட்டம் இருப்பது முக்கியம். திரைக்கு இந்தப் பக்கத்திலுள்ள சபை தனக்குள்ளேயே எந்த நீதியையும் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது கிறிஸ்துவில் ஒரு முன்மாதிரி மற்றும் ஒரு பரிந்துபேசுகிறவரைக் கொண்டுள்ளது. இந்த ஞானம் நகரத்திலுள்ள பத்து அதிபதிகளைப் பார்க்கிலும், ஞானியை அதிக பெலவானாக்கும். (பிரசங்கி7:19) இது பூமிக்குரிய அரசாங்கங்களைப் அடையாளப்படுத்தும் முழு எண்ணிக்கை. "சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே, கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்பட வேண்டியதாகும். அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாயென்று, உன் மனதுக்கு தெரியுமே."(பிரசங்கி 7:21,22)

நீதிமான் ஒருவரும் இல்லை என்பதே இறுதிப் பாடம் (ரோமர் 3:10) அன்பு நம் இருதயத்தை வழிநடத்தும் திசைகாட்டியாக இருக்க வேண்டும். பூரண அல்லது சரியான இருதயத்தின் நோக்கம் புது சிருஷ்டியின் ஆவியை நிறைவாக பெற்றிருக்க வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றி, அவருடைய வாழ்க்கையையும், ஊழியத்தையும் முடிந்தவரை பிரதிபலிக்கும் ஒரு குணலட்சனத்தை அணிய முயற்சிப்போம். சூரியனுக்குக் கீழே, நம்முடைய பரலோகத் தந்தைக்கு ஊழியம் செய்து வாழ்வதே சிறந்தது என்பதை சாலொமோனிடமிருந்து நாம் கற்றுக்கொள்வோம்.

# ஒரு விலைமதிப்புள்ள பொருள்
# ஞானத்தின் தேவை



David Rice

"இவை எல்லாவற்றையும் ஞானத்தினால் சோதித்துப்பார்த்தேன், நான் ஞானவானாவேன் என்றேன், அது எனக்குத் தூரமாயிற்று." (பிரசங்கி 7:23)

" ஞானத்தின் மதிப்பு நீதிமொழிகளிலும் வெளிப்படுத்தப்படுகிறது. "ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி, என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்." (நீதிமொழிகள்4:7) சாலொமோனுக்கு தேவனால் ஞானம் கொடுக்கப்பட்டிருந்தாலும், இதை பெறுவது சவாலாக இருக்கும் என்பதை அவர் உணர்ந்தார்.

"ஞானத்திற்கு அனுபவம் தேவை. வருடங்கள் கடக்கும் போது, கடந்த கால அனுபவத்தைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, நல்ல தேர்வுகளுக்கும் நல்ல வழிகளில் நம்மை வழி நடத்தின தேவனுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் விவேகமற்ற தேர்வுகளும் நம் கவனத்தை ஈர்க்க வேண்டும். அந்த சமயங்களில், காலமும் நேரமும் சூழ்நிலையும் நம்முடைய கவனத்தை - மோசமான தேர்வுகளின் முடிவுளிலும் சரியான வருத்தத்திலும் கவனம் செலுத்த வைக்கும். இதன் விளைவுகள் நம்மை மட்டும் பாதித்தால், பாடத்தை கருணையுடன் ஏற்றுக் கொண்டு சிறப்பாக செய்ய முற்படலாம். அதன் விளைவுகள் மற்றவர்களை பாதித்திருந்தால், நினைவாற்றலும் வருத்தமும் ஆழமாக இருக்கலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொண்டு, நம்முடைய நடத்தையை சரி செய்ய வேண்டும்.

ஞானத்தைப் பாதுகாப்பதில் உள்ள சிரமத்தை சாலொமோன் இங்கு கருத்தில் கொள்கிறார். "தூரமும் மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டடைகிறவன் யார்? ஞானத்தையும் காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறியவும் என் மனதை செலுத்தினேன்." (பிரசங்கி 7:24, 25)



*Samson, a picture of the Gospel Age Church*

**தீர்க்கதரிசன இணைப்பு**

பிரசங்கி 7:26-28இல் சாலமோன் ஒரு பரிசுத்தமற்ற ஸ்திரீயின் கண்ணிகளைப் பற்றி பேசுகிறார். "மதிகேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும்" பற்றி அறிந்துகொண்டு, நாம் தவிர்க்க வேண்டிய 25ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முட்டாள்தனங்களில் இதுவும் ஒன்றாகும். மூன்று சந்தர்ப்பங்களில் சிம்சோனும் சந்தித்த துன்பம் இது. சிம்சோனின் அனுபவங்கள் சுவிசேஷ யுகத்தின் சபையின் அனுபவங்களுக்கு அடையாளமாக இருப்பதால்,ரோம திருச்சபையை அடையாளப்படுத்தும் "யேசபேல்" என்ற அசுத்தமான ஸ்திரீ (வெளிப்படுத்தல்2:20) இருண்ட காலம் மற்றும் அதற்கு பிறகும், சபையை கடுமையாக உபத்திரவப்படுத்தியது நமக்கு நினைப் பூட்டுகிறது. ஏதோ பரிசுத்தமான போர்வையில் வழங்கப்பட்ட இந்த அசுத்தமான அமைப்பை அடையாளம் காண்பது,வெளிப்படுத்துதல் 13:18இல் ஞானத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. "இதிலே ஞானம் விளங்கும், அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன், அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது, அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு."

இதை உணர்ந்த பீட்டர் வால்டோ, அவருக்குப் பிறகு ஜான் விக்லிஃப், ஜான் ஹஸ், ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மார்ட்டின் லூதர் மற்றும் புராட்டஸ்டன்ட் பொதுவாக சீர்திருத்தத்தை தொடங்கினர். வெளிப்படுத்துதல் 17:5,ரோம



*Paul, as prisoner, writing to brethren*

திருச்சபையை வெளிப்படையான மொழியில் பேசுகிறது. "மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது." இதைத் தொடர்ந்து 9 ம் வசனம் வருகிறது, "ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்." அந்த அமைப்புக்கு இந்த வசனத்தில் சொல்லப்படும் ஸ்திரீயானவள் ஒரு நீண்ட எடுத்துக்காட்டாக இருக்கிறாள். "கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுமுடைய ஸ்திரீயானவள்,....பாவியோ அவளால் பிடிபடுவான்" (பிரசங்கி 7:26) இருப்பினும், மத்தேயு15:19ல் இயேசு கவனித்தபடி, இவ்வுலகின் சாதாரண பாவங்களைத் தவிர்ப்பதற்கு நம் கவனமும் தேவைப்படுகிறது. யாக்கோபும் மற்ற மூப்பர்களும் எருசலேமில் ஒரு மாநாட்டைக் கூட்டியபோது, மாம்சத்தின் பாவங்களைத் தவிர்க்க புறஜாதி விசுவாசிகளுக்கு அறிவுரை வழங்க ஒப்புக்கொண்டனர். "விக்கிரங்களுக்குப் படைத்த அசுத்தமானவை



*We are in the harvest,*
*the ending period of the age.*

களுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன். (அப்போஸ்தலர்15:20) பின்னர், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவிலுள்ள சகோதரர்களிடம் இந்த காரியத்தை குறித்து பேசினார். "உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே..... அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே." என்று வலியுறுத்தினார். (1கொரிந்தியர்5:1) 1கொரிந்தியர் 6:13ல் அவர் அதை மீண்டும் கூறுகிறார். மேலும் 18ம் வசனத்தில், "வேசித்தனத்திற்கும் விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும், வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்" என்று கூறினார் . இதை குறித்து பவுல் மேலும் எச்சரிக்கிறார் - 1கொரிந்தியர்7:2, 10:8, 2கொரிந்தியர்12:21, கலாத்தியர்5:19, எபேசியர்5:3, கொலோசேயர்3:5, 1தெசலோனிக்கேயர்4:3.

**விளக்கம்**

@ ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார் ? காரியத்தின் தாற்பரியத்தை அறிந்தவன் யார் ? மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும்." (பிரசங்கி 8:1) வரலாறு, தெளிவான உண்மைகள் மற்றும் நேரடியான அறிவுரைகள் ஆகியவற்றால் வேதாகமம் நிறைந்துள்ளது. இருப்பினும், விளக்கத்திற்கும் ஏராளமான இடமும் உள்ளது. ஆபிரகாம் மற்றும் அவருடைய குடும்பத்தின் வாழ்க்கையில், தேவன் ஆபிரகாமுடனும் மோசேயுடனும் ஏற்படுத்திய உடன்படிக்கையின் சித்திரங்களை பவுல் கண்டார். ஆகார் நியாயப்பிரமாண உடன்படிக்கையையும், அவளுடைய குமாரன் இஸ்மயேல் மாம்ச இஸ்ரயேலை அடையாளப் படுத்துகிறார்கள். சாராள் ஆபிரகாமின் உடன்படிக்கையையும், அவளுடைய குமாரனாகிய ஈசாக்கு, ஆவிக்குரிய இஸ்ரயேலரையும் அடையாளப்படுத்துகிறார்கள். (கலாத்தியர் அதிகாரம்3,4)

இது போன்ற விளக்கங்கள், ஆபிரகாமின் வாழ்க்கையில் கூடுதல் விவரங்களைத் தேடுவதற்கும், பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட மற்றவர்களின் அனுபவங்களைப் பார்ப்பதற்கும் சில ஆதாரங்கள் கொடுக்கப்படுகிறது. ஒரு சிந்தனைமிக்க வேத மாணவர், இந்த வேதாகம வரலாற்றின் பதிவுகளில், தேவனுடைய திட்டத்தின்

விவரங்களை சித்திரங்களாக பார்க்கிறார். ஒரு ஞானமுள்ள தேவனுடைய பிள்ளை இந்த சிந்தனைத் துறையின் வரங்களைப் பாராட்டுவார் - சில மறைவான காரியங்களை உணருவார், அந்த விளக்கத்தை அங்கீகரிப்பார்.

பிரசங்கி 8:6 ல் ," எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு, ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி." தேவனுடைய யுகங்களின் வரைப்படத்தில், யுகங்களைப்பற்றிய தேவனுடைய திட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நாம் இதை காணலாம். ஆனால் சாலொமோன் முதன்மையாக நடைமுறைக் குறித்தும், நம் வழியில் வரும் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும் கவனித்தார். எனவே அவர் "இன்னது சம்பவிக்கும் என்று அவன் அறியானே, அது இன்னவிதமாய்ச் சம்பவிக்கும் என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் யார் ?" (பிரசங்கி 8:7) என்று கூறுகிறார். வாழ்க்கையின் சூழ்நிலைகளில், என்ன அனுபவங்கள் வரும், அவை எப்போது வரும் என்றும் அல்லது அவற்றில் தேவனுடைய நோக்கத்தை நாம் எப்போதும் உணர முடியாது. வாழ்க்கையின் அனுபவங்கள் பலதரப்பட்டதாகவும், எதிர்பாராததாகவும் இருக்கும். ஆனால் அவர் எதை இயக்குகிறாரோ, அல்லது அனுமதிக்கிறாரோ, தேவன் தலைமை தாங்குகிறார். பல்வேறு வகையான வாழ்க்கையை, விசுவாசத்தோடு பெற்றுகொண்டால், கிறிஸ்தவ குணத்தை வளர்க்கக்கூடிய அனுபவ வலைப்பின்னலை உருவாக்கலாம். ஒரு குறிப்பிட்ட அனுபவத்தின் மதிப்பைப் பார்த்தால், அது அற்புதமாக இருக்கும். இல்லையென்றால், உலகிற்குப் பொதுவான பின்னணி அனுபவத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வோம்.

## ஒரு நூறு முறை

"பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன ? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்." (பிரசங்கி8:12) தற்போதைய பாடம் என்னவென்றால், இந்த தீமையின் அனுமதியின் போது, கெட்ட செயல் களுக்கு எப்போதும் விரைவான வெகுமதி கொடுக்கப் படுவதில்லை. இதைப் பொருட்படுத்தாமல், தேவனுக்குப் பயந்து, ஒழுங்காக வாழ்பவர்கள் "அவர்கள் நன்றாக இருப்பார்கள்" என்று உறுதியளிக்கப்படுகிறது. அருகில் இல்லை என்றாலும், நிச்சயமாக நீண்ட காலத்திற்கு பிறகு அவர்கள் நன்றாக இருப்பார்கள். "நூறு தரம்" என்ற சொற்றொடர், ஒரு பெரிய எண், இதை குறித்து நாம் பிரசங்கி 6:3ல் நாம் பார்க்கிறோம். "ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து..."மேலும் ஏசாயா 65:20 வில் "அங்கே... நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று

எண்ணப்படுவான்" இந்த இரண்டு காரியங்களிலும், இப்போது அல்லது இராஜ்யத்தில் பொதுவாக மனுக்குலத்தின் அனுபவங்களைக் குறிக்கிறது. மேலும் ஆசரிப்புக் கூடாரத்தில் 100 என்ற எண்ணை மீண்டும் மீண்டும் காண்கிறோம் என்பதை இது நமக்கு நினைப்பூட்டுகிறது. இது இயேசுவின் மூலம் மனுக்குலத்திற்கான தேவனுடைய மீட்பின் திட்டத்தை விளக்குகிறது. வாசல், கதவு மற்றும் திரை ஆகியவை ஒவ்வொன்றும் 100 முழமும், கூடாரத்தின் வெள்ளி பாதங்கள் 100 என்று கணக்கிடப்படுகிறது. இந்த நான்கு நிகழ்வுகளிலும் 100 என்ற எண் "இயேசுவின் எண்" ஆகும். அவரே "வழியும் சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார்" (யோவான்14:6) மற்றும் மனுக்குலத்தின் மீட்பிற்கு அஸ்திபாரமாகத் தம் ஜீவனையே கொடுத்தவர்.

**பணிவு**

கடந்த காலத்தின் பரிசுத்தவான்கள் பெற்ற, தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவை காட்டிலும் நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். ஏனென்றால், நாம் சுவிசேஷ யுகத்தின் அறுவடை அல்லது இறுதி காலத்தில் வாழ்கிறோம். பொதுவாக அறிவு பெருகியுள்ளது, ஆனால் நமது சிறப்புப் பொக்கிஷம் ஆவிக்குரிய விஷயங்களில் அறிவு அதிகரிப்பதாகும். (தானியேல்12:4) இதை நாம் பொக்கிஷமாகக் கருத வேண்டும். இருப்பினும், ஏற்கனவே, திரையை கடந்து மேலாக மகிமைக்கு சென்ற நம்முடைய சகோதர, சகோதிரிகள் பெற்ற அறிவோடு, நாம் பார்க்கும் பாக்கியம் என்ன என்பதை ஒப்பிடவேண்டும்.

"நான் ஞானத்தை அறியவும்... பூமியிலே செய்யும் வேலைகளைப் பார்க்கவும் என் மனதைச் செலுத்தினபோது,..தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக்கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான், அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான். "(பிரசங்கி 8:16,17) எனவே பணிவு எப்போது ஒழுங்காக இருக்கும். "நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது." (1கொரிந்தியர்13:9)

"ஞானத்தால் பிறந்த மனத்தாழ்மை, அதிக வற்புறுத்தலுக்கு (திசை திருப்புதல்) எதிராக நம்மை காக்கும். மேலும் நம்முடைய சகோதரர்களின் சுதந்திரத்திற்கு எதிராக நம்மை செயல்படவிடாது.

### தேவனுடைய கரத்தில்

"நீதிமான்களும் ஞானிகளும் தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கைவசமாயிருக் கிறார்கள்.. எல்லாருக்கும் எல்லாம் ஒரே விதமாய்ச் சம்பவிக்கும்.." (பிரசங்கி 9:1,2) ஆனால் தேவன் நீதிமான்களுக்கு அவர்களின் நன்மைக்காக அனுபவங்களை மாற்றுவார். இதற்கிடையில், நிகழ்காலத்தில் நம்முடைய வாழ்க்கையை பாராட்டலாம். "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" (வசனம் 5) எனவே, "நீ போய், உன் ஆகாரத்தைச் சந்தோஷத்துடன் புசித்து, உன் திராட்சரசத்தை மனமகிழ்ச்சியுடன் குடி, தேவன் உன் கிரியைகளை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார். (வசனம் 7) இருப்பினும், நம்முடைய நடத்தை பரிசுத்தமாக இருக்கவேண்டும், மேலும் நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். "உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக" (வசனம் 8) சாலொமோன் அன்றாட வாழ்க்கைக்கு சில நடைமுறை ஆலோசனைகளை வழங்குகிறார். "நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அநுபவி.." (வசனம் 9)அப்படிப் பட்டவர்களுக்கு என்ன ஒரு இனிமையான பாக்கியம். நன்றியுடன் இருப்போம். மேலும் நம்முடைய வாய்ப்புகளில் ஆர்வமாக இருப்போம். "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்..." (வசனம் 10) தற்காலத்தில், "சமயமும் தேவச் செயலும் நேரிடவேண்டும்." (வசனம் 11) நம் வாழ்வின் முடிவும் கூட வலையில் சிக்கிய மீனைப் போல "திடீரென்று"நம்மீது வரக்கூடும். (வசனம் 12) எனவே, நமக்கு வாய்ப்பு இருக்கும்போது, நன்மைச் செய்து, நல்லவர்களாக இருக்கவேண்டும் என்று ஞானம் அறிவுறுத்துகிறது.

இந்த ஞானமும் கூட

ஒன்பதாம் அதிகாரத்தின் முடிவில், சாலொமோன் மற்றொரு காரியத்தை கூறுகிறார். "சூரியனுக்குக் கீழே ஞானமுள்ளகாரியத்தையும் கண்டேன், அது என் பார்வைக்குப் பெரிதாய்த் தோன்றிற்று. " (வசனம்13) முற்றுகையிடப்பட்ட ஒரு பட்டணத்தின் அனுபவத்தை அவர் விவரிக்கிறார், "ஒரு ஏழை ஞானியின்" ஞானத்தால் விடுதலை வழங்கப்பட்டது, அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பு இருந்தபோதிலும், விரைவில் அவரின் உதவி மறக்கப்பட்டது. "பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்....ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக்கவைகள்... யுத்த ஆயுதங்களைப்பார்க்கிலும் ஞானமே நலம், .." (வசனங்கள் 14-18) ஞானத்தினால், நாம் "குறைவாக பயன்படுத்தப்பட்ட பாதையை" தேர்வு செய்கிறோம். "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர். (மத்தேயு 7:14) "முத்துக்களைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை உயர்ந்தது."(யோபு 28:18)

வாழ்க்கையின் பாடங்கள்

# வாழ்க்கை, பின்னோக்கிப் பார்க்கையில்



Joe Megacz

"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" (பிரசங்கி 12:1)

– பிரசங்கி பத்து, பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் அதிகாரங்களில், சாலொமோன் தனது கடந்த வருடங்கள் அவருக்கு என்ன பாடங்களை கற்பித்தன என்று வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறார். பத்தாம் அதிகாரத்தின் தொடக்கத்தில், சாலொமோன் தம்முடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, வயதாகி வருவதை குறித்து சில காரியங்களை முன்வைக்கிறார். அனைத்து பொருள் ஆதாயமும் மாயை என்று ஏற்கனவே பலமுறை அறிவித்த சாலொமோன், மறுபுறம், ஞானம் மற்றும் கனத்திற்கான ஒரு நபரின் நற்பெயர், மதிப்புமிக்க உடைமையாகும். இதை பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும் என்பதை அவர் அங்கீகரிக்கிறார்.

## அதிகாரம் பத்து

பிரசங்கி 10:1,"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப் போகப்பண்ணும், ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்." நம்முடைய வார்த்தைகளையும் செயல்களையும், குறிப்பாக, மற்றவர்களின் முன்னிலையில் எவ்வளவு கவனமாகவும், தொடர்ச்சியாகவும் கட்டுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதேபோல, 2கொரிந்தியர் 6:3ல் "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களை தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்" என்று பவுல் கூறுகிறார்.

பிறகு, ஞானத்தைப் பெறவும் அதை வெளிக்காட்டவும் தனது அறிவுரைகளை சாலொமோன் தொடர்கிறார். மதியீனமான மற்றும் தீமையான ஆட்சியாளர்களுக்கு எதிராக அவர் தொடர்ச்சியான எச்சரிக்கைகளை வெளியிடுகிறார் - அதாவது அவர்களை எவ்வாறு கண்டுக்கொண்டு, கையாள்வது என்பதை விவரித்தார். தான் கட்டிய ஆலயத்தையும், அவருடைய இராஜ்யத்தின் மகத்துவத்தையும், பார்ப்பதற்கு மற்ற



Abraham Lincoln



*Give, and it shall be given unto you.*

நாடுகளிலிருந்து வந்து தம்மைச் சந்திக்க வந்த இப்படிப்பட்ட பல ஆட்சியாளர்களை அவர் பார்த்தார் என்பதில் சந்தேகமில்லை.

முட்டாள் அரசர்களைப் பற்றிய சாலொமோனின் விளக்கம், பொது அறிவுப் பெற்ற ஊழியர்களுக்கு மாறுப்பட்டதாக இருந்தது. வசனம் ஆறு மற்றும் ஏழில் சொல்லப்பட்டது போல சில நேரங்களில் நகைச்சுவையாகவும் இருந்தது. "மூடர் மகா உயர்ந்த நிலையில் வைக்கப்படுகிறார்கள், சீமான்களோ தாழ்ந்த நிலையில் உட்கார்ந்திருக் கிறார்கள். வேலைக்காரர் குதிரைகள் மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர்போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன்." (பிரசங்கி 10-6,7)

சாலொமோனின் நாள் முதல் நம் நாட்கள் வரை பல தேசங்களில் முட்டாளான, திறமையற்ற ஆட்சியாளர்கள் இருந்துகொண்டுவருகிறார்கள். நான்காம் வசனத்தின் உபதேசம் இரண்டு நிலைகளில் குறிப்பிடத்தக்கது. "அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால் உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே, இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்." (வசனம் 4) "உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே" என்ற சொற்றொடருக்கு உறுதியாக நிற்பது என்று பொருள்.

இதை இயல்பாக சொல்லவேண்டுமானால், "உங்களை கொடுமைப்படுத்துபவர்களுக்கு நீங்கள் எதிர்த்து நிற்காவிட்டால், அவர்கள் உங்களை இன்னும் கொடுமைப்படுத்துவார்கள்." என்று சாலொமோன் கூறுகிறார். நாம் பயப்படக்கூடாது, கோபமாகவோ கசப்பாகவோ இல்லாமல் நிதானமாக பதில் சொல்லவேண்டும். ஆவிக்குரிய நிலையில், தற்போதைய இந்த தீய உலகின் அதிபதியாகிய சாத்தானைக் குறிப்பிடுவதை நாம் காணலாம்.

நீதிக்காக உறுதியாக நிற்கவேண்டும் என்ற சாலொமோனின் அறிவுரையை, யாக்கோபு4:7ல் உள்ள வசனம் எதிரொலிக்கிறது. "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." பத்து முதல் பதினைந்து வசனங்களில் முட்டாள்தனமான எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களைத் தவிர்ப்பதற்கான அறிவுரைகள் உள்ளது. மேலும் நடைமுறை ஞானத்தின் சில துகள்களும் உள்ளது. அவைகளுக்குள் உள்ள பத்தாம் வசனத்தை வாசிப்போம்,"இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பிரயோகம் பண்ணவேண்டியதாகும். ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்."(வசனம் 10)

"இருப்பு" என்பது ஒரு கோடாரியைக் குறிக்கும், "தீட்டுவது" என்பது ஒரு கோடாரியைக் கூர்மைப்படுத்துவதற்கான ஒரு கருவியைக் கொண்டு அதை தீட்டவேண்டும். ஆபிரகாம் லிங்கன், அநேகமாக இந்த வேதவாக்கியத்தை உள்ளுணர்ந்து, பின் வரும் இந்த பிரபலமான வாக்கியத்தை கூறியிருக்கவேண்டும். "ஒரு மரத்தை வெட்ட எனக்கு ஆறு மணிநேரம் கொடுத்தால், முதல் நான்கு மணிநேரத்தை கோடாரியை கூர்மைப்படுத்த நான் செலவிடுவேன்" என்று கூறினார்.

உண்மையில் ஆவிக்குரிய காரியங் களானாலும், சொல்லர்த்தமான காரியங்களானாலும் பணியில் விரும்பிய பலனை மிகவும் திறம்பட அடைவதற்கு, முன்னதாகவே திட்டமிடப்பட்டு, உங்களையும் உங்கள் கருவிகளையும் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் கைகளில் ஆவிக்குரிய கோடாரி இல்லை, ஆனால் ஒரு அடையாளமான பட்டயமாகிய தேவனுடைய வார்த்தைகள் உள்ளது. அதைப் பற்றிய நம்முடைய புரிதலை நாம் கூர்மையாக வைத்திருக்கவேண்டும். அதை எப்போதும் பயன்படுத்த ஆயத்தமாக வைத்திருக்கவேண்டும்.

இறுதி வசனங்களில், சாலொமோன், புத்திசாலிகள் மற்றும் மதியீனமான ஆட்சியாளர்களை கவனிக்க திரும்புகிறார். அவர்களின் ஞானத்தின் தாக்கம் அல்லது, அதற்கு எதிராக தேசத்தின் ஜனங்களின் முட்டாள்தனத்தை கவனித்தார்.

பிரசங்கி 10:16,17:- இராஜா சிறுபிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, உனக்கு ஐயோ! இராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல், பெலன் கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே நீ பாக்கியமுள்ளது!"

முதிர்ச்சியற்ற மற்றும் ஞானமற்ற ஆட்சியாளர் தனது ஜனங்களை முட்டாள்தனமாக வழிநடத்தி, அவர்களுக்கு துன்பம் வருவிப்பார், என்பதே இந்த வசனங்களின் பொருளாகும். "அதிகாலே உண்கிறது" என்பது தற்போதயை யுகத்தில் ஓய்வெடுக்கவும், விருந்துகளில் கலந்து கொள்வதும், தற்காலிகமான வாழ்க்கையை அனுபவிப்பதே பொருள். அதாவது முதலில் சம்பாதிக்க உழைத்து, பிற்பாடு ஓய்வெடுத்து, மகிழ்ச்சியாக இல்லாத ஒரு நிலை. இதற்கு நேர்மாறாக, ஒரு உன்னதமான, ஞானமுள்ள ஆட்சியாளர் தனது ஜனங்கள் எதிர்காலத்தில் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க இப்போது விடாமுயற்சியுடன் வேலை செய்ய வழிநடத்துவார். இதே கொள்கையை நீதிமொழிகள்



*Rejoice, O young man, in thy youth."*



*The years take their toll.*

20:4 போதிக்கிறது. "சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான், அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது." இந்த கோட்பாடு, நம்முடைய நித்திய எதிர்காலத்திற்கான ஆயத்தத்திற்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. நம்முடைய ஆண்டவரின் ஒத்த குணாதிசயத்தை உருவாக்க, இப்போது நம்முடைய ஆவிக்குரிய பணியை மிகவும் துரிதமாக செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பத்தாம் அதிகாரத்தின் கடைசி வசனம், தீய பேச்சுக்கு எதிரான எச்சரிக்கையாக உள்ளது. "இராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே, ஆகாயத்துப்பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டுபோகும், செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும். "(பிரசங்கி 10:20) ஒரு சகோதரனைப் பற்றிய நமது இழிவான எண்ணங்களை ஒருவரிடம் பகிர்ந்து கொண்டால், பொதுவாக நமக்குத் தெரியாமலேயே, நம் வார்த்தைகள் மற்றவர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லப்படும். இதுவும் மாயையே.

**அதிகாரம் பதினொன்று**

பிரசங்கி பதினோராம் அதிகாரம் ஒரு அறிவுரையுடன் தொடங்குகிறது.(11: 1) "உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு, அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்." நடைமுறை அளவில், இந்த வசனம் தேவைப்படுபவர்களுக்கு நம்முடைய பொருட்களை தாராளமாக வழங்குவதாகும். நாம் அப்பத்தை தூக்கி எறிவது போல, இத்தகைய செயல்கள் அதிகப்படியான தாராளமாகவும், வீணாகவும் தோன்றலாம். ஆனால் ஒரு நவீன வெளிப்பாடு இவ்வாறு சொல்கிறது - "போவது எதுவோ, அது திரும்ப வரும்" அதேபோல லூக்கா 6:38வில் "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று " இயேசு கூறுகிறார். பொருள் உதவி தேவைப்படுபவர்களுக்கு, குறிப்பாக நம் சகோதரர்களிடையே காணப்படும் போது அதை நாம் தவிர்க்க முடியாது. இதற்கு நேர்மாறாக, ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, சுயநலமே இன்றைய உலகை ஆட்சிச் செய்கிறது. ஆனால் ஆவிக்குரிய விஷயங்களில் தாராள மனப்பான்மை இன்னும் முக்கியமானது. நமக்கு சத்தியமாகிய அப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜீவ அப்பம், நமக்கு முன் பெற்றவர்கள் நம்மோடு பகிர்ந்து கொண்டவர்களிடமிருந்து நாம் பெற்றுகொண்டோம். நமக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் உலக

ஜனங்கள் மீது, சத்திமாகிய அப்பத்தை எறிவதில் விடாமுயற்சியுடன் இருக்கவேண்டும். இந்த தாராள மனப்பான்மையில் விசுவாசமாக இருந்தால், பல நாட்களுக்குப் பிறகு, பூமியில் நம்முடைய பயணம் முடிந்த பிறகு, நாம் ஆயிரமடங்கு ஆசீர்வதிக்கப் படுவோம்.

வசனம் இரண்டு இந்த பெருந்தன்மையான சிந்தனையை விரிவுபடுத்துகிறது. (பிரசங்கி 11: 2)"ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு, பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உங்களால் முடிந்தவரை, எவ்வளவு, கொடுக்கமுடியுமோ, எத்தனை பேருக்கு கொடுக்க முடியுமோ, நீங்கள் கொடுங்கள், ஏனென்றால் உங்களால் கொடுக்கமுடியாத நேரம் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது.

பின்னர், மூன்றாம் வசனம் நமக்குச் சொல்வது போல், இறுதியில் நேரம் முடிந்துவிட்டது, மேலும் தாராளமாக இருப்பதற்கும் நன்மை செய்வதற்கும் வாய்ப்பு இருக்காது.

இதேபோல், வசனம் நான்கு, தயங்காதீர்கள் "இப்போதே செய்யுங்கள்" என்று அறிவுறுத்துகிறது. "காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான், மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்." ஒரு சோம்பேறி விவசாயினுடைய சிந்தனையை சாலொமோன் விவரித்தபடி, தாமதப்படுத்துவதற்கான ஒரு காரணத்தை நாம் எப்போதும் வைத்திருக்கலாம் - மிகவும் காற்றடிக்கிறது அல்லது மழை பெய்கிறது போன்றவை..

மற்றொரு அர்த்தத்தில் நாம் பார்த்தால், இந்த வசனம் நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை அதிகமாக பகுப்பாய்வு செய்வதைத் தவிர்க்க சொல்கிறது. இது பகுப்பாய்வு "முடக்குதலுக்கு" வழிவகுக்கிறது - அதிகமாகச் சிந்திப்பது மற்றும் குறைவாக மதிப்பிடுவது. ஆறாம் வசனம் இந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. (வசனம் 6)"காலையிலே உன் விதையை விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே, அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே. " வேறு வார்த்தைகளில் சொன்னால், "உங்கள் சிறந்த நேரத்தையும் திறமையையும் கெண்டு அவர் உங்களுக்கு முன் வைத்த தேவனுடைய வேலையைச் செய்யுங்கள். முடிவுகளை அவரிடமே விட்டுவிடுங்கள். ஆண்டவரையும், சத்தியத்தையும் நம்முடைய சகோதரர்களையும் சேவிப்பதற்கான நம்முடைய முயற்சிகள் நம்முடைய பொறுப்பாக உள்ளது. அதற்கான பலன் நம்முடைய பொறுப்பல்ல. பிரசங்கி 11:8-10இல் சாலொமோன் தம்முடைய இறுதி பிரதிபலிப்பை தொடங்குகிறார். அவருடைய இளமையின் மகிழ்ச்சிகள் மற்றும் நல்ல காலங்கள், தனது முதுமையின் துக்கங்கள் மற்றும் இருண்ட காலங்களில் இருந்து எவ்வாறு வேறுப்பட்டது என்று விவரிக்கிறார். "மனுஷன் அநேக வருஷம் ஜீவித்து, அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும், அவைகள் அநேகமாயிருக்கும், வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே. வாலிபனே, உன்

இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே. "(8-10) வாழ்க்கையில் ஏற்ற தாழ்வுகள் உள்ளது என்பதையும், அதில் எந்த ஒரு ஏற்ற தாழ்வுகளும் நிலைத்திருக்காது என்பதற்கு நாம் அனைவரும் சான்றளிக்க முடியும். யாரோ ஒருவர் கூறியது போல், "நம்மால் செய்யக்கூடியது சிறந்தது."

பின்னர் நாம் நன்றாக வாழ்ந்த வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, நமது ஆசீர்வாதமாக இருந்த மகிழ்ச்சிகளை, குறிப்பாக ஆவிக்குரிய மகிழ்ச்சிகளைப் பொக்கிஷமாகக் கருதுங்கள், மேலும் கற்றுக் கொண்ட பாடங்களையும், நமது கடினமான அனுபவங்களிலிருந்து பெற்ற ஆவிக்குரிய வளர்ச்சியையும் பாராட்டும்போது, நாம் பெற்ற கடினமான வலியை விட்டுவிடுங்கள்.

## அதிகாரம் பன்னிரெண்டு

பிரசங்கி பன்னிரெண்டாம் அதிகாரம், பதினொன்றாம் அதிகாரத்தின் (எட்டு முதல் பத்து வசனங்கள் )தொடர்ச்சியான பிரதிபலிப்பாக தோன்றுகிறது. அதாவது பன்னிரெண்டாம் அதிகாரம் பிரசங்கி 11:8ல் இருந்து தொடங்கி இருக்கவேண்டும் போல் தோன்றுகிறது. ஏனெனில், பிரசங்கி12:1"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை." என்று வாசிக்கிறோம். முதல் வசனத்தின் இந்த பகுதி அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது. மேலும் இது நம் பிள்ளைகளுக்கு அவர்களின் நற்குணங்கள் உருவாக்கப்படும் போது, சிறுவயதிலேயே சத்தியம் மற்றும் நீதியைப் பற்றி தேவனுடைய கொள்கைகளை கற்பிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி பேசுகிறது. அவர்கள் தெய்வீக குழந்தைகளாகக் கற்பிக்கப்பட்டால், அவர்கள் தெய்வீக ஆண்களாகவும், பெண்களாகவும் வளருவார்கள். இந்த வார்த்தைகள் கிறிஸ்தவ பெற்றோரின் மேல் எப்படிப்பட்ட பொறுப்பை சுமத்துகிறது !துரதிர்ஷ்டவசமாக, இந்த வார்த்தைகள் அடிக்கடி புறக்கணிக்கப்படுகின்றது.

பிரசங்கி 12:1ல் பிற வார்த்தைகளும் உள்ளது. "தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்,..." என்று வசனம் தொடருகிறது. இப்போது சாலொமோன் தனது முழு கவனத்தையும் முதுமையின் சுமையின் மீது திருப்புகிறார், மேலும் நாம் வயதாகும் போது வாழ்க்கை எவ்வளவு கடினமாகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார். நாம் விரைவாகவும் எளிதாகவும் செய்து வந்த காரியங்கள் கடினமாகி, அதிக நேரம் எடுக்கும்.

உண்மையில், வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில், முதியவர்களில் சிலர் வாழ்வதில் அதிக மகிழ்ச்சியைக் கொண்டிராமல், தாங்கள் மரிப்பதற்காகவே மீதமுள்ள நாட்களில் காத்திருக் கிறார்கள். நமக்கு வயதாகும் போது நமது சீரத்தில்

ஏற்படும் சரிவுகளைப் பற்றி நன்கு அறியப்பட்ட உருவகத்தை நமக்கு வசனங்கள் இரண்டு முதல் ஆறு வரை, சாலொமோன் தருகிறார். "சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்கு முன்னும், மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத்திரும்ப வராததற்கு முன்னும்.."(பிரசங்கி 12:2) வெளிச்சம் இருட்டாக மாறுவதை, மனத் தெளிவு இழக்கப்படுவதைப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. நாம் வயதாகும்போது, நாம் முன்னிருந்தபோது காரியங்களை நினைவில் வைத்திருந்தது போல, இப்போது நினைவில் வைத்திருக்க முடியாது. மேலும், நம்மால் முந்தி சிந்தித்தது போல இப்போது விரைவாக சிந்திக்க முடியாது. மேகங்கள் உபத்திரவங்களை குறிக்கிறது. மேலும் வயதானவர்கள் தங்கள் மனதில் அடிக்கடி வேதனைப்படுவார்கள், சில சமயங்களில் நாள்பட்ட மனச்சோர்வில் அவர்களை அது ஆழ்த்திவிடுகிறது. பாதகமான சூழ்நிலைகளை அடையாளப்படும் மழைக்கு பின், துன்பகரமான மேகங்கள் ஒவ்வொரு நாளும் விரைவாகத் திரும்புகின்றது. அதைத்தான்" மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத்திரும்ப வராததற்கு முன்னும் "என்று வாசிக்கிறோம். பிரச்சனைகளை பின்னாக தள்ளிவிட்டு, வாழ்க்கையை நகர்த்துவது மிகவும் கடினமாகி விடுகிறது.

வசனம் மூன்று "....வீட்டுக்காவலாளிகள் தள்ளாடி பெலசாலிகள் கூனிப்போய், ஏந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டுபோகிறதற்கு முன்னும்...." இங்கு நம் சரீரங்கள் ஒரு வீடாக சித்தரிக்கப்படுகிறது. நம்முடைய சரீரமாகிய வீட்டை நம் கைகள் காப்பாற்றுகிறது. அவைகள் நம்மை உடுத்தி, அன்றாட வாழ்க்கையின் பணிகளைச் செய்யவும் பயன்படுகிறது. வயதாகும்போது நம் கைகள் தளரர்ந்து போய் நடுங்குகின்றன. பெலசாலிகள் நம்முடைய கால்கள். அவைகளும் வலுவிழந்து இடுப்பு மற்றும் முழங்கால்களில் வலி அதிகமாகிறது. ஏந்திரம் அரைக்கிறவர்கள் நம்முடைய பற்கள். நவீன பல் மருத்துவம் இப்போது சாலொமோனின் காலத்தில் இருந்ததைவிட நம் பற்களின் எண்ணிக்கை சிறப்பாகப் பாதுகாக்கப்படுகிறது. ஆயினும்கூட, நாம் வயதாகும்போது நமது பற்களில் ஏற்படும் பிரச்சனைகள் அதிகமாகின்றது. இந்த உருவக வீட்டின் ஜன்னல்கள் நம் கண்கள், அவை நம் பார்வை மோசமடையும் போது இருட்டாகின்றது.

வசனம் நான்கு - "ஏந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப்போகாததற்கு முன்னும்..."பல வயதானவர்கள் தங்கள் வாழ்க்கையின் கதவுகளை மற்றவர்களுக்கு மூடிவிடுகிறார்கள், அல்லது யாரும் அவர்களை பார்க்க வராமல், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தனிமையாகிறார்கள். அரைக்கும் சத்தம் குறைவது என்பது தொழில் மற்றும் வேலைகளின் முடிவை குறிக்கிறது. இது பெரும்பாலும் தனிமை உணர்வை ஏற்பத்துகிறது, ஏனெனில் சக ஊழியர்களுடனான பல வருட உறவுகள் முறிந்து வயதானவர்களுக்கான நட்பு இழக்கப்படுகிறது. திரையின் இந்தப் பக்கம் நம்

வாழ்க்கையில் இறுதிவரை, சகோதரர்களின் பந்தங்கள் ஒருபோதும் இழக்கப்படாமல், வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் சகோதரர்கள் ஐக்கியம் பெற்ற நாம் எவ்வளவு பாக்கியமுள்ளவர்கள்!. வயதானவர்களுக்கு தூங்குவதிலும் பிரச்சனை உள்ளது. சிறதளவு இடையூறு ஏற்பட்டாலும் மீண்டும் தூங்க முடியாது. கூடுதலாக, கீதவாத்தியக் கன்னிகைகள் என்று அடையாளப்படுத்தப்படும் நம்முடைய குரல் வளம் மற்றும் கேட்கும் திறன் குறைந்துவிடுகிறது. சில நேரங்களில், நாம் அனுபவித்த சந்தோஷங்களை இனி அனுபவிக்க இயலாமல் போய்விடும்.

வசனம் ஐந்து - "மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமை மரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னும் மனுஷன் தன் நித்திய வீட்டுக்கு போகிறதினாலே துக்கங்கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்கு முன்னும்...." வயதாகும்போது, சமநிலையை இழந்து விடுகிறார்கள். கவலைகள் பெருகி, வாதுமை மரத்தின் பூத்த பூவைப் போல தலைமுடி வெண்மையாகிவிடுகிறது. வெட்டுக்கிளிகள் போன்ற சிறிய பிரச்சனைகள் மனதில் பெரிதாக்கப்படுகின்றது. மேலும் திருமணமானவர்களிடையே நெருக்குவதற்கான ஆசை குறைகிறது.

ஒரு கணத்தில், கண் இமைக்கும் நேரத்தில் மாற்றப்படும் சபை வகுப்பாரைத் தவிர, அனைவரும் இறுதியில் நீண்ட காலமாக மரணம் என்ற வீட்டிற்கு செல்லவேண்டும்.

வசனம் ஆறு - "வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து துரவண்டையில் உருளை நொறுங்கி..."(இவை அனைத்தும் மரணத்தின் காரணங்கள்) வெள்ளி கயிறு நம்முடைய நரம்பு மண்டலமாகும். இது சேதமடைந்தால் பல வகையான தசை நோய்கள் மற்றும் வாதங்கள் கூட ஏற்படலாம். பொற்கிண்ணம் நம் தலை. பக்கவாதம் அல்லது இரத்தக்கசிவு ஏற்பட்டால், பெரும்பாலும் மரணம் விரைந்திடும். நம்முடைய நுரையீரல்கள் சால் என்று குறிப்பிடப்படுகிறது. நுரையீரல் நோய்கள் பெரும்பாலும் ஆபத்தானவை. துரவண்டையில் உள்ள உருளை இருதயத்தை குறிக்கிறது. இது நொறுங்குவது, இருதய செயலிழப்பை விவரிக்கிறது.

இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும் அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை." ஆதியாகமம் 3:19ல் தேவன் ஆதாமிடம், "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் " என்று கூறினார். பிரசங்கி 12:8 ல் சாலொமோன் தனது பழக்கமான வார்த்தைகளை மீண்டும் கூறுகிறார். இந்த முறை இறுதியாக உணர்வுடன் அதை கூறி முடிக்கிறார். "மாயை, மாயை எல்லாம் மாயை"

எவ்வாறாயினும், நித்தியத்திற்கும் ஒரு உயர்ந்த நிலையில் தொடரும், ஒரு உயர்ந்த நோக்கம் மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை நாம் வாழ முடியும் என்பதில் நாம் மகிழ்ச்சியடையலாம். நமக்கு என்ன ஒரு பாக்கியம்!

## ஒவ்வொரு செயலின்
# இறுதியுரை



"ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள் போலவும் சங்கத்தலைவர்களால் அறையப்பட்ட ஆணிகள் போலவும் இருக்கிறது, அவைகள் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது. என் மகனே, இவைகளினாலே புத்தியடைவாயாக, அநேகம் புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை, அதிகபடிப்பு உடலுக்கு இளைப்பு காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்." (பிரசங்கி12:1114)

@ பிரசங்கி முடிக்கும் போது - அனைத்தும் மாயை அல்லது வெறும் சுவாசம் என்று மதிப்பிடுகிறார். வாழக்கையின் மாயை பற்றி விரிவாக விவாதித்த பிறகு, சாலொமோன் நமக்கு தேவனை சுட்டிக்காட்டுகிறார். " தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக் கொள் "

நம்முடைய முயற்சிக்கு வெகுமதி கிடைக்கும் என்று பின்னர் யோவானும் கூறுகிறார். "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம், அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. (துயரமானது)" (1யோவான் 5:3) "ஞானிகளின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்கள் போலவும்.." (வசனம் 11) இந்த தாற்றுக்கோல்கள், பண்டைய காலத்தில், குறிப்பாக சாலொமோனின் நாட்களில், மிருகங்களை வழிடத்தவும், எஜமானர்கள் விரும்பும் இடத்திற்கு அவைகளை கொண்டு சேர்க்கவும் உதவியது.

அதேபோல, தேவனுடைய வார்த்தைகள் நம்மை சரியான திசையில் செல்வதற்கு வழிகாட்டியாக இருக்கிறது. சில நேரங்களில் அவை விரைவாக துண்டிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் 26:14 ல் பவுல் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் மகிமையடைந்த இயேசுவை சந்தித்ததை அகிரிப்பாவிடம் விவரிக்கையில் இந்த உருவகம் காணப்படுகிறது.

இயேசு சவுலை சரியான திசையில் அழைத்துச் சென்றார், ஆனால் அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை சிறையில் அடைத்து துன்புறுத்தினார் என்பதை வேதனையுடன் உணர்ந்தபோது அந்த வழிநடத்துதலைப் பெற்றார். (கலாத்தியர் 1:13)



*The conversion of Saul*



***New Jerusalem, the church in glory, the Kingdom of God, will bless “all the families of the earth.”***

"அநேக புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை, அதிகபடிப்பு உடலுக்கு இளைப்பு" (வசனம் 12)சாலொமோனின் நாளில், பெரும்பாலும் தகவல்கள் கையால் எழுதப்பட்டது. இன்று சாலொமோன் என்ன சொல்வார்? நூலகங்களிலிலும், அமேசானிலும் Amazon சமூக ஊடகங்களிலும் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஏராளமான தகவல்களின் தொகுப்புகளை நாம் பல வேறு இடங்களிலிருந்து பெறுகிறோம். ஆனால் இன்று நம்மிடம் உள்ள பெரும்பாலான தகவல்கள் பயனற்றவைகளும் நம்பத்தகாததுமாக உள்ளது. மாற்றாக, நாம் வேதத்தைப் படிக்கும்போது, நாம் தேவனுடைய உண்மையான ஞானத்தைப் படிக்கிறோம்.

தீமோத்தேயுவுக்கு பவுலின் அறிவுரைக்கு செவிசாய்ப்போம், "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், “ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி விசுவாசத்தை விட்டு வழுவிப்போனார்கள். கிருபையானது உன்னோடேகூட இருப்பதாக ஆமென்." (1தீமோத்தேயு 6:2021) " ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் " (பிரசங்கி12:814)

இயேசுவின் ஆயிரம் வருடம் நீதியான ஆட்சியில், உலகம் நியாயத்தீர்ப்புக்குள் கொண்டுவரப்படும். சோதிக்கப்பட்டு, இக்கட்டுகளை அனுபவித்து, crisis நிரூபிக்கப்படும். ஆனால் அது ஒரு நீதியான சோதனையாகவோ அல்லது இக்கட்டாகவோ crisisஇருக்கும். தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கான நியாயமான சோதனையாக இது முழு மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படும்.

இந்த வாய்ப்பின் பலன் அல்லது நித்திய ஜீவனுக்கான அல்லது இரண்டாம் மரணத்திற்கான சோதனை, கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட மாபெரும் மீட்புப் பணியின் விளைவாக வரும். இது தேவனுடைய விருப்பம். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். " (1தீமோத்தேயு 2:4) சாத்தான் கட்டப்பட்டிருப்பான், மனுஷனுடைய செயல்களில் பாவம் ஆதிக்கம் செலுத்த முடியாது. ஆதாம் தனது பரிபூரணத்தில் அனுபவித்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமைகள் மற்றும் அனுகூலங்களுக்குத் திரும்புவதற்கான முழு வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்படும். இதற்கு மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தில் இரக்கத்துடன் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

ஆனால், வரும் எதிர்காலம் - நித்திய ஜீவன் அல்லது மரணத்திற்கான உலகின் உண்மையான சோதனைக் காலமாக இருக்கும், அதே வேளையில், இப்போது செய்யப்படும் ஒவ்வொரு நற்செயல் களுக்கும், ஒவ்வொரு தீய செயலுக்கும் ஒரு தாக்கம் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒவ்வொரு நல்ல செயலும், ஒவ்வொரு நல்ல எண்ணமும், ஒவ்வொரு நல்ல வார்த்தையும், குணத்தின் மீது அதன் மேம்பாடு மற்றும் பயனுள்ள செல்வாக்கைக் கொண்டுள்ளது. அது போலவே, ஒவ்வொரு கெட்ட வாத்தையும், எண்ணமும், செயலும் குணத்தின் மீது தீங்கிழைக்கும். கர்த்தருடைய சகோதரர்களில் ஒவ்வொருவருக்கும் செய்யப்படும் ஒவ்வொரு கருணைக்கும் வெகுமதி கிடைக்கும். இவர்களில் மிகச் சிறியவர்களில் ஒருவருக்குச் செய்யும் ஒவ்வொரு தீய செயலுக்கு தண்டனை வழங்கப்படும்.(மத்தேயு25:3146)

"இவ்வாறு மனுக்குலத்தின் உலகம் இப்போது தங்களுடைய நித்தியமானவைகளை பொறுத்தமட்டில் அவர்களது நன்மையோ தீமையையோ சேகரித்து வைக்கிறார்கள். மரியாதைக்குரியவர்கள், நேர்மையானவர்கள் ,கிறிஸ்தவர்களாகவோ அல்லது பரிசுத்தவான்களாக மாறாவிட்டாலும், எதிர்கால சோதனையின் போது அவர்கள் செய்த நன்மைக்கேற்ப சிறந்த நிலையைப் பெறுவார்கள். மதிப்பற்றவர்கள் எதிர்காலத்தில் அவர்கள் செய்த தீமைக்கு தக்கதாக சீரழிவை அடையவார்கள். மேலும் மிகவும் சீரழிந்தவர்கள், இரட்சகராம் இயேசுவோடு, மகிமையடைந்த சபையின் உதவியோடு பாவம், மரணம் ஆகியவற்றிலிருந்து வெளியே வருவதற்கும் கூடுதலான அடிகளை பெறவேண்டியதாக இருக்கும். (1கொரிந்தியர் 6:2) (R4902).

தேவனுடைய வார்த்தையின் மூலம் நமக்குக் கொடுக்கப்பட்ட ஞானத்தைத் தொடர்ந்து பின்பற்றுவோம். மேலும் சாலொமோனைப் போல, உலகத்தின் இன்பங்களை பின்பற்றுவது நித்தியமான திருப்தியைத் தராது என்பதை உணர்ந்து கொள்வோம்.

அதற்கு மாறாக, இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து, அவருக்காக நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்தால், இப்போதும், எப்போதும் நித்தியமான மகிழ்ச்சியை, பெறுவோம்!

Pastoral Bible Institute
P.O. Box 3274
Bremerton, WA 98310

Non-Profit Org.
U.S. Postage
PAID
Addison, IL
Permit No. 109

